பக்கம் எட்டு
விலை ரூபா 5.00

பொது ... -7 JAN 2001 மாநகராட்சி மன்றம்

வலம்புரி
VALAMPURI

லாலா சோப்
சன்சயின் சோப்
விநியோகஸ்தர்
சர்மிலன் ஸ்ரோர்ஸ்
பலாலி வீதி,
ஊரெழு
லாலாசோப் அச்சுவேலி
(கி.1045)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2031 மார்கழி 23 ஞாயிற்றுக்கிழமை (7-1-2001) தொ. பேசி 3378 ஒலி: 19

# தென்மராட்சிப் பகுதியில் மக்கள் மீளக்குடியேறுவதை தவிர்த்துக்கொள்க!

## புலிகளின்குரல் வானொலி அறிவிப்பு

(வவுனியா நிருபர்)

தென்மராட்சிப் பகுதியில் எமது அனுமதி இன்றி எமது மக்கள் மீளக்குடியேறுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு தமிழீழவிடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இப்பகுதியில் பல்லாயிரக் கணக்கில் விதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள், கண்ணிவெடிகள், பொறிவெடிகள் ஆகியன அகற்றப்பட்டு மக்கள் மீண்டும் வந்து குடியேறக்கூடிய சூழ்நிலையை விரைவில் உருவாக்குவோம். அதுவரை தென்மராட்சிப் பகுதிக்கு மீண்டும் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் விடுதலைப்புலிகள் தமது புலிகளின் குரல் வானொலி மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் உத்தியோக பூர்வமான புலிகளின் குரல் வானொலியில் தென்மராட்சிப்பகுதியில் மக்கள் மீளக்குடியேறுவது தொடர்பாக வேண்டுகோளொன்றை விடுத்துள்ளனர்.

அவ் வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

**ஆக்கிரமிப்புப் போர்:**

போரென்றால் போர், சமாதானம் என்றாலும்

(8-ம் பக்கம் பார்க்க)

# புலிகளின் தடையை நீக்காமல் அரசுடன் பேச நாம் விரும்பவில்லை

## ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பேட்டி

(கொழும்பு)

பயங்கரவாத அமைப்பு என்ற பட்டியலில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை நீக்காமல், நடத்தப்படுகின்ற பேச்சுவார்த்தைகள் முன்னேற்றகரமானதாக அமையாது.

இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அண்மையில் வழங்கிய பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அப் பேட்டியில் அவர் மேலும்தெரிவிக்கையில்கூறியதாவது:

பேச்சு வார்த்தை மேசையில் நாம் இலங்கை அரசாங்கத்தோடு சமநிலையில் இருந்தே பேச விரும்புகின்றோம். தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பாக

(8ஆம் பக்கம் பார்க்க)

# மேலும் ஒரு சந்தேகநபர் நீதிமன்றில் ஆஜர்

(மந்திகை)

மிருசுவில்ப் பகுதியில் இடம் பெற்ற 8 பேருடைய படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவரெனச் சந்தேகிக்கப்பட்ட மேலும் ஒருவர் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் முன்னிலையில் கொடிகாமம் பொலிஸாரால் ஆஜர் செய்யப்பட்டார்.

மஹலகவ நாகொல்கம என்ற இடத்தைச் சேர்ந்த கே.ரி. எம். முதியாங்கலாகே என்ற சிப்பாயே ஆஜர்ப்படுத்தப்பட்டவராவார்.

மேற்படி சிப்பாயை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும், எதிர் வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள அடையாள அணிவகுப்பில் இவரை ஆஜர் செய்யுமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (23)

## ஜெகன் எம்.பியின் தலையீட்டால்

# 16 மீனவர்களும் நேற்று விடுதலை

மீன்பிடிப்பதற்குவரையறுக்கப்பட்ட எல்லையை மீறிச் சென்றனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் நேற்றுக் காலை படையினரால் கைதுசெய்யப்பட்டு யாழ். பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த 16 மீனவர்களும் நேற்று மாலை விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்களின் கைது குறித்து யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி. பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளருமான கே.வி குகேந்திரன் [வி.கே.ஜெகன்]

(8-ம் பக்கம் பார்க்க)

# இலங்கைத் தமிழ்பெண் கனடாவில் குத்திகொலை

(கனடா)

இலங்கை தமிழ் பெண் ஒருவர் கனடிய நகரான ஸ்காபரோவில் கடந்த சனிக்கிழமை கத்தியால் கொடூரமாகக்குத்திக்கொல்லப்பட்டுள்ளார். சந்தான லட்சுமி சண்முகராசா என்னும் இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவரே வீட்டில் தனியாக இருந்த போது கத்தியால் பலதடவை கோரமாகக் குத்திக் கொல்லப்பட்டுள்ளார். இக் கோரக் கொலை தொடர்பாக கனடிய பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர். (வ)

## களுத்துறை

# நித்தியதாஸின் சடலம் மனைவியிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

களுத்துறை சிறைச்சாலையில் மர்மமான முறையில் வெட்டிக் கொலை செய்யப்பட்ட திருமலை இளைஞன் சணமுகராசா நித்தியதாஸின் சடலம் நேற்று அடையாளம் காணப்பட்டதை அடுத்து அவரது மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டது.

கொல்லப்பட்ட நித்தியதாஸின் சடலத்தை தாயார் கௌசல்யாவும், மனைவியும் நாகொட வைத்தியசாலையில் வைத்து அடையாளம் காட்டியுள்ளனர்.

மேற்படி சடலம் அடையாளம் காணப்பட்டதை அடுத்து சடலம் திருமலைக்கு எடுத்

(8-ம் பக்கம் பார்க்க)

# 10 எலும்புக் கூடுகளும் அரச செலவில் அடக்கம்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழிப்பகுதியில் படையினரால் மீட்கப்பட்ட 10 எலும்புக் கூடுகளும் நேற்று அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் எலும்புக் கூடுகளில் நான்கு எலும்புக் கூடுகள் பெண்களுடையவை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பதுங்கு குழி ஒன்றிலிருந்து இவ் எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டதாகவும்,

இவற்றில் இரண்டு சடலங்களாகவே காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-12)

# ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா)

நேற்று முன்தினம் நாகர்கோவில் பகுதியில் இராணுவத்தினர் மேற் கொண்ட கலிபர்க் தாகுதலில் ● பாவரசி அன்ரன்டேவிற் பத்மசீலி (மன்னார் மாவட்டம்) என்றபோராளி தமதுதரப்பில் உயிரிழந்துள்தாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (ந-5)

## இடம்பெயர்ந்த அரியாலை, பாசையூர்

# மக்களை மீளக்குடியமர்த்த அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அண்மைக்கால யுத்த நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த அரியாலை, துண்டி பாசையூர் மற்றும் கண்டி வீதியின் தெற்குப் பகுதி ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்களை மீளவும் அவ்விடங்களில் குடியமர்த்த வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு தமிழ் விவகார அமைச்சரும் ஈ.பி.டி.பி யின் செயலாளர் நாயகமுமாகிய டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகஈ.பி.டி பி நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது;

அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

மீள் குடியேற்றத்தின் முதற் கட்டமாக இன்று ஜே/92, ஜே/94 ஆகிய கிராம சேவகர் பிரிவு மக்கள் குடிய

(8ம் பக்கம் பார்க்க)

# குண்டுகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை பகுதியில் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் 81 மில்லி மீற்றர் மோட்டார் குண்டு ஒன்றும் இரண்டுகைக் குண்டும் கைப்பற்றப்பட்டதாக விசேட ஊடக தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

# லங்கா முடித்த நாளை புறப்படும்

(யாழ்ப்பாணம்)

நாளை இடம்பெறவுள்ள லங்கா முடித்த கப்பலின் இரண்டாவது சேவையில் பயணத்தை மேற்கொள்ளவுள்ள பயணிகளுக்கான பயணப் பதிவுகள் இன்று காலை 9-00 மணிமுதல் 'ரான்' அலுவலகத்தில் மேற்கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 5ந்திகதி கப்பலுக்கு பயணச்சீட்டு பெற்றிருந்த போதும் பயணத்தை மேற்கொள்ளாதவர்கள் பயண ஆயத்தங்களுடன் நாளை திங்கட்கிழமை காலை 6மணிக்கு ரான் அலுவலகத்துக்கு வரு

(8-ம் பக்கம் பார்க்க

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

இம்மாதம் 03 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படியான இலக்கங்கள்;

### சங்கானை

| | |
|---|---|
| 161876 ஏ | 161876 பி |
| 161335 ஏ | 169335 பி |
| 169335 சி | 169335 டி |
| 170056 ஏ | 170056 பி |
| 172805 ஏ | 172805 பி |
| 172805 சி | 172805 டி |
| 172930 ஏ | 172991 ஏ |
| 172991 பி | 174746 ஏ |
| 174981 ஏ | 175000 ஏ |
| 175000 பி | 175714 ஏ |
| 175802 ஏ | 175806 ஏ |
| 175806 பி | 175835 ஏ |
| 175864 ஏ | 175865 ஏ |
| 175865 பி | 175899 ஏ |
| 175899 பி | 175956 ஏ |
| 175956 பி | 176553 ஏ |
| 176613 ஏ | 176613 பி |
| 176661 ஏ | |

### நல்லூர்

| | |
|---|---|
| 152003 ஏ | 174739 பி |
| 174790 ஏ | 175922 ஏ |
| 176757 ஏ | 176757 பி |
| 176757 சி | 176790 ஏ |
| 176790 பி | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 170145 ஏ | 172812 ஏ |
| 172812 பி | 172817 ஏ |
| 172817 பி | 174807 ஏ |
| 174807 பி | 174845 ஏ |
| 175845 பி | 174901 ஏ |
| 174901 பி | 175892 ஏ |
| 175892 பி | 175985 ஏ |
| 175985 பி | 176006 ஏ |
| 176006 டி | 176008 ஏ |
| 176008 பி | 176008 சி |
| 176549 ஏ | 176549 பி |
| 176551 பி | 176552 ஏ |
| 176552 பி | 176563 ஏ |
| 176563 பி | 176563 சி |
| 176626 ஏ | 176628 ஏ |
| 176628 பி | 176628 சி |
| 176708 ஏ | 176731 ஏ |
| 177006 ஏ | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 176543 ஏ | 176543 பி |

### உடுவில்

| | |
|---|---|
| 173046 ஏ | 173047 ஏ |
| 173047 பி | 173168 ஏ |
| 174938 ஏ | 174938 பி |
| 174938 சி | 174985 ஏ |
| 174985 பி | 175087 ஏ |
| 175087 பி | 175733 ஏ |
| 175733 பி | 175733 சி |
| 175733 டி | 175734 ஏ |
| 175734 பி | 175798 ஏ |
| 175882 ஏ | 175882 பி |
| 176535 ஏ | 176535 பி |
| 176551 ஏ | 176599 ஏ |
| 176599 பி | 176599 சி |
| 176599 டி | 176727 ஏ |
| 176794 ஏ | 176794 பி |
| 176799 ஏ | |

(ச)

## மனிதனின்....

(7ஆம் பக்க தொடர்ச்சி)

ணங்கள் சம்பந்தமான தொழிலும் உங்களுக்கு நல்ல பலனைக் கொடுக்கும். தொழில் தான் செய்யவேண்டும்என்ற நிர்ப்பந்த மில்லை. இந்தத் தொழில் சம்பந்தமுள்ள இடத்தில்நீங்கள்உத்தியோகத்திலிருந்தும் உயர்வு பெறலாம்.

**பிறந்த எண் 1- விதிஎண்-2**

நீங்கள் அனேகமாய் ஏதேனும் உத்தியோகம் பார்ப்பவர்களாய்த் தான் இருப்பீர்கள். சிறுபகுதிகள், ஓரிடத்திலிருந்து மற்றோர்இடத்திற்கு பொருட்களை அனுப்பும் தொழிலில் ஈடுபட்டுச் சிறப்பெய்து வீர்கள் இன்னும் சிலர் ஆடம்பரப் பொருட்கள், மின்சாரம் சம்பந்தமான தொழிலில் ஈடுபடுவீர்கள்.

**பிறந்த எண்-1 விதி எண்-3**

இவர்கள் பால் பண்ணை, கோழிப் பண்ணை வைத்து மேன்மையுறலாம், சாப்பாட்டுப் பொருள்கள் சம்பந்தமான தொழிலிலும்சிறப்பெய்தலாம். அல்லது இந்தவகைத் தொழில் சம்பந்தமான இடத்தில் உத்தியோகம் பார்த்துப் பணம் சம்பாதிக்கலாம்.

(தொடரும்)

## அன்னைத் தமிழை...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

றிய பணிகளை பட்டியலிட முடியாது. அவரின் பணிகளை போற்றிய சைவத்தமிழ் உலகம் அவருக்கு சைவப் புலவர், சைவ வித்தகி, சைவதரிசினி, சிவசமயச் செல்வி, சிவத்தமிழ்ச் செல்வி, சிவஞானவித்தகர், சித்தாந்தஞானகரம், செஞ்சொற்செம்மணிதுர்க்கா துரந்தரி எனபலபட்டங்களை வழங்கி கௌரவித்துள்ளது.

அன்னையின் சிறந்த பேச்சாற்றல், அவரது சமூக சமயப் பணிகள், அவரது நிர்வாகத் திறன், வெற்றி கண்டு வியந்து போற்றிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதி பட்டத்தையும் சூட்டி அவரது சேவையை இவ்வுலகில் மேலும் பெருமைப்படுத்தியுள்ளது அவரது பணியால் சிறந்து நிற்கும் துர்க்காதேவி தேவஸ்தானமும், அதன் செயல் பாடுகளும், துர்க்கா மணிமண்டபமும் அதன் பணிகளும் இன்னமும்அவரால் நிறுவப்பட்ட அறச்சாலைகளும் அவர் ஆற்றிவரும் அளப்பெரும் சேவைகளின் சின்னமாகும்.

நல்லை நகர் நாவலருக்குப் பின் மல்லை தந்த சைவத் தமிழ் காவலராக விளங்கும் அன்னையின் பணிகள் காலத்திற்குஏற்றனவாக, காலத்தின் தேவையை கருத்தில் கொண்டவையாக இருப்பது மிகவும் சிறந்த அம்சமாகும் பெண்கள் கடமையைச் சரிவரச் செய்யும் போது தமக்குரிய உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற கருத்துடைய இவர் வெறுமனே பெண்ணியம்பேசுபவராகஇல்லாது சிறந்ததலைமைத்துவத்தின் மூலம் பெண்களுக்கு வழி காட்டுபவராகவும், எமது பகுதியில் பெண்களுக்காக குரல் கொடுக்கும் தகைமை உடையவராகவும், பெண் தலைமைத்துவத்திற்கு உதாரண புருஷராகவும் விளங்குவது அவரது சிறப்புப் பண்பு ஆகும்.

திக்கற்ற பெண் குழந்தைகளை பராமரித்தல், அவர்களை கல்வி உலகில் வல்லவராக மாற்றுதல், இன்றும் வயோதிபர்கள் தமது முதுமைக் காலத்தைக் கடக்கபடும் அல்லலை கருத்தில் கொண்டு வயது வந்த பெண்களுக்கான இல்லத்தை இன்று ஆரம்பித்தல் போன்றதை எல்லோராலும் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகக் காணப்படுகிறது

காலத்திற்குக் காலம் எமது பகுதி மக்கள் படும் இன்னல்களைக் கருத்தில் கொண்டு அவரால் பேசப்படும் கருத்துக்கள் பல உள்ளங்களை நெகிழச் செய்யும். சமய வழி முறைகளை பின் பற்றுவதன் மூலம் எமது இனம் சமூகம் நிறைவு பெற முடியும் என்பதுஅவரது உறுதியான நம்பிக்கை. வன்முறைகள், புலப்பெயர்வுகள் மத்தியிலும் நடமாடும் சேவை நிலையமாக மனம் தளராது செய்யும் பணியும் தொடர்ந்து ஆற்றிவரும் அன்னை பல்லாண்டு காலம் தமிழ்ச்சொல்லாண்டு பல தொண்டாற்றி வாழ இத்தரணியில் அனைவரும் எல்லாம் வல்ல துர்க்கை அம்மனைப் பிரார்த்திப் போம்.


## கவின் கலைகள் பயிலகம்

### திருமறைக் கலாமன்றம்

எமது பயிலகத்தினால் நடந்தப்படும் கீழ் உள்ள கற்கை நெறிகளுக்கான 2001 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- சங்கீதம்
- மிருதங்கம்
- வயலின்
- கிற்றார்
- நடனம்
- வீணை
- ஓர்கன்
- ஓவியம்

விண்ணப்ப முடிவுத் திகதி 20-01-2001 விண்ணப்பப் படிவங்களை மன்ற அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொ: பே. 2393

பொதுச் செயலாளர்
திருமறைக் கலாமன்றம்
(கி/931)


# பரிசோதிக்கப்படாத மாட்டிறைச்சி

# ஊர்காவற்றுறையில் விற்பனை

## பொதுமக்கள் தரப்பில் புகார்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட மாட்டிறைச்சிக்கடைகளில் சுகாதாரப் பரிசோதனைக்குட்படுத்தப்படாத இறைச்சி விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்களால் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச சபையினால், இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படுவதற்குரிய அனுமதி வழங்கப்பட்டதை தவிர, சுகாதார பரிசோதகர்கள் பரிசீலித்து சீல் வைக்கப்படுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப் படாமையே இதற்கு காரணமாக அமைவதாகக்கூறப்படுகிறது.

இதே சமயம், கொல்களத்தில் மாடுகள் வெட்டப்படுவதற்குரிய பணத்தினை அறவீடு செய்பவர்கள் அதில் காட்டுகின்ற அக்கறையை, அவற்றின் சுகாதாரத் தன்மையை உறுதிப்படுத்துவதிலும் காட்ட வேண்டும் என பொது மக்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

(உ-75)

## இன்று பாலர் கலைவிழா

(யாழ்ப்பாணம்)

அராலி சரஸ்வதி பாலர் பாடசாலையின் பாலர் கலை விழா இன்று பிற்பகல் 2.30 மணியளவில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் இடம்பெற உள்ளது.

வலி. மேற்குப் பிரதேச சபைத்தலைவர் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளுவார். (க-24)

## இன்று பொதுக்கூட்டம்

[யாழ்ப்பாணம்]

கோண்டாவில் கிழக்கு இருபாலை வீதியில் அமைந்திருக்கும் ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயக சனசமூக நிலையத்தின் வருடாந்தப்பொதுக்கூட்டம் இன்று பி.ப. 3.00 மணியளவில் நிலையத் தலைவர் ஆனந்தமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-14)

## பொங்கல் கலைப் பொழுது

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொங்கல் விழாவை முன்னிட்டு 15 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5.30 மணியளவில்திருமறைக் கலாமன்றத்தில் 'பொங்கல் கலைப்பொழுது' நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் 'சோழன் மகன்' நாட்டுக்கூத்து போன்ற பல நிகழ்ச்சிகள் இடம் பெறும். (உ)

## புதிய பஸ் கட்டண அதிகரிப்பு விபரம்

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய போக்குவரத்துச்சபைபுதிய பஸ் கட்டணங்களை அதிகரித்துள்ளது. இப்புதிய பஸ் கட்டணங்கள் இன்று முதல் அமுலுக்கு வருமென வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பொதுமுகாமையாளர் சொக்கலிங்கம் அறிவித்துள்ளார்.

புதிய பஸ் கட்டண விபரம் வருமாறு. தற்போது நடைமுறையிலுள்ள 3 ரூபா கட்டணத்தில் மாற்றம் எதுவுமில்லை.

| தற்போதைய கட்டணம் ரூ. சதம் | புதிய கட்டணம் ரூ. சதம் |
|---|---|
| 3.50 | 4.00 |
| 4.50 | 5.00 |
| 5.00 | 6.00 |
| 6.00 | 7.00 |
| 6.50 | 7.50 |
| 7.50 | 9.00 |
| 8.50 | 10.00 |
| 9.00 | 10.50 |
| 10.00 | 11.50 |
| 10.50 | 12.00 |
| 11.50 | 13.00 |
| 12.00 | 14.00 |
| 12.50 | 14.50 |
| 13.00 | 15.00 |
| 14.00 | 16.00 |
| 14.50 | 17.00 |
| 15.50 | 18.00 |
| 16 00 | 18.50 |
| 16.50 | 19.00 |
| 17 50 | 20.00 |
| 18.00 | 21.00 |
| 18.50 | 22.00 |
| 19.50 | 23.00 |
| 20.00 | 23.00 |
| 21.00 | 24.00 |
| 21.50 | 25.00 |
| 22.00 | 26.00 |

(வ)

## இராசி பலன்

7-1-2001

(மார்கழி 23, ஞாயிறு)
துவாதசி மு.ப 9.07
ரோகிணி மு.இ 7.59
ராகுகாலம் 5.02- 6.32
சுபநேரம் 9.32- 11.02
பிரதோச விரதம்

**மேடம்**
கௌரவக் குறை, காரிய தாமதம், பொருள்விரயம், விவாதம்.

**இடபம்**
ஆழ்ந்த சிந்தை, உடல் நலம், சயன சுகம், காரிய சித்தி.

**மிதுனம்**
பிரயாண அலைச்சல், சயன சுகக்குறைவு, கோபப்படுதல், காரிய தாமதம்.

**கடகம்**
காரியம் கைகூடும், தன லாபம், புகழடைதல், நண்பர்கள் சந்திப்பு.

**சிங்கம்**
தொழில் மேன்மை, பெரியோர் சந்திப்பு, முயற்சி பலிதம், அதிகாரம்.

**கன்னி**
பிரயாணம், கட்டுப்படுதல், மனதிற்கு அச்சம் தோன்றல், உடல் உபாதை.

**துலாம்**
நிலைக்கேடு, எதிர்பாராத பிரச்சினை, கடன்தொல்லை, வியாதி ஏற்படல்.

**விருச்சிகம்**
போசனசுகம், பிரயாணம், தனவரவு, சுவாரஸ்யம்.

**தனுசு**
சந்தோசமான சம்பவம், சத்துருஜெயம், புதியமுயற்சி, காரிய ஜெயம்.

**மகரம்**
உடல் சோர்வு, நினைத்த காரியம் தாமதம், வியாதி, கட்டுப்பாடு.

**கும்பம்**
உறவினர் வெறுப்பு, தன்னம்பிக்கைக்குறைவு, முயற்சி தாமதம், எதிர்பாராத நன்மை.

**மீனம்**
பிரயாணம், காரியம் கைகூடும், சகோதரர் உதவி, இனிய சம்பவம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

— வளவன்


SHAMROCK

ஈச்சமோட்டை வீதியில்

**மீண்டும் ஆரம்பமாகியுள்ளது**

தரம் 4 முதல் 8 வரை (மட்டும்)

- புலமைப் பரிசில் (தரம்-5)
- மாதாந்த பரீட்சைகளுக்கு ஊக்குவிப்பு பரிசில்களும் வழங்கப்படும்

(கி/930)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 76ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா

# சிறப்பு மலர் 07 - 01 - 2001

## அன்னைத் தமிழையும் அருஞ் சைவத்தையும் போற்றி வளர்த்த பெருந்தகை துர்க்காதுரந்தரி

அன்னைத் தமிழையும், அருஞ் சைவத்துறையையும் போற்றி வளர்த்த பெரியார்கள் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற புண்ணிய மண்ணாம் மல்லாகத்தில் சைவத்தமிழ் உலகின் தவப் பயனால் செஞ்சொற் செம்மணி எம்மிடை தோன்றினார். மெருகூட்ட மிளிரும் தங்கம் போல், பணிகள் பலவற்றை அணி செய்து அகிலத்தின் அம்மாவாக பிரகாசிக்க தோன்றிய அன்னைக்கு தங்கம்மா என பொருத்தமான நாமத்தையும் சூட்டினர் பெற்றோர்.

தனது ஆரம்பக் கல்வியை மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் ஆரம்பித்த இவர் தொடர்ந்து இராமநாதன் கல்லூரியில் உயர்கல்வி பயின்றார். இவர் யாழ்ப்பாணப் பெண்கள் பண்டித பரீட்சையிலும், சென்னை சைவ சித்தாந்த சமாசத்து சைவப் புலவர் தேர்விலும் சித்தி பெற்றார். இவரது ஆற்றலுக்கு மிகவும்பொருத்தமான ஆசிரியப் பணியை ஆற்றி தனது சேவைக் காலத்தில் மிக இளவயதில் இருந்தேபலரதும் பாராட்டுக்களையும் பெற்று வந்தார்.

புன்னகை பூத்த முகமும், நெற்றியில் துலங்கும் சிவ சின்னத்துடன் அவருக்கே உரித்தான அமைதியான நடையும் வெண்கலக்குரலும் எல்லோரிடத்தும் அன்பும், செயல்களில் பண்பும், சைவத்தில் பக்தியும், தமிழில் பற்றும், சமூகப் பணிகளில் ஆர்வமும் கொண்ட இவர் பதினெட்டு வயதில் இருந்தே தனது சைவத்தமிழ்த் தொண்டினை ஆரம்பித்தார்.

சைவ சமய பீடங்களாக விளங்கும் தமிழகத்திலுள்ள தருமபுரம், திருவாவடுதுறை ஆதீனம் போன்றவற்றில் இருபது வயது முதலே ஆழமான தொடர்பினை வைத்திருந்த இவர் சமய வல்லுநர் சொற்பொழிவு ஆற்றும் இடங்களில் சொற்பொழிவு ஆற்றுவதற்கான அனுமதி



களைப் பெற்று தனது செஞ்சொல் ஆற்றலால் ஆதீனக் குரவர்களின் பாராட்டுக்களைப் பெற்றிருந்தார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர்கள், இலக்கிய ஆராய்ச்சி மாணவர்கள் மத்தியில் தனது 30 ஆவது வயதிலேயே சிலப்பதிகாரத்தை பற்றிய ஆய்வுரை ஒன்றை நிகழ்த்தி அறிஞர்களை வியப்பில் ஆழ்த்தினார். இதே காலப்பகுதியில் சென்னை சைவசித்தாந்த மகாசமாஜம் நடத்திய ஆரணி சைவ மங்கையர் மகா நாட்டிற்கு தலைமை தாங்கி நடத்தும் வாய்ப்பையும், புகழையும் பெற்றார்.

காலத்திற்கு காலம் சைவமும் தமிழும் சோதனைக்கு உள்ளாகும் போது அதனை காக்கவென அருளாளர்கள் தோன்றி உள்ளார்கள்.

''பெரியாரைப் பேணித் தமதாகக் கொள்ளல்'' என்ற அருமை வாக்கியத்திற்கு அமைய சைவத்திற்கும், தமிழுக்கும் பெருமை சேர்த்து வாழ்ந்த பெரியோர்கள் வாழ்க்கைத் தத்துவத்தை பின்பற்றி இன்று உலகில் தமிழை வளர்க்க, சைவத்தை மேலோங்கச் செய்ய அன்னை துர்க்கா துரந்தரியை துர்க்கை அம்மன் எமக்களித்தார் என்றால் அதில் மிகையேதும் இல்லை

தனது முப்பதாவது வயதிலே சிக்காகோ சர்வமத மகாசபை பேருரை நிகழ்த்தி இந்து சமய தத்துவத்தை உலகில் நிலைநிறுத்திய சுவாமி விவேகானந்தர் அவர்களிடம் பிற்காலத்தில் சர்வமத மகாசபையை யார் நடத்தியது என்று கேட்ட போது அம்பாள் தான் நடத்திவைத்தாள் சமர சமயமாகிய இந்து தத்துவத்தை உலகுக்கெல்லாம் நான் எடுத்துச்சொல்ல வேண்டுமென்றே சர்வேதவல்லியானவள் சர்வமத மகாசபையை நடத்தினாள் என்று கூறினார்.

அதேபோன்று தேவி துர்க்கையின் அடியவராக அவர் தம் பணிகளை ஆற்றி அம்பாளிற்கு ஆலயம் அமைத்து அதனூடாக அறப்பணிகள் புரிந்து அறச்சாலைகள் சைவசமய ஆய்வு மன்றங்களை அமைத்து சைவம் என்றால் என்ன? சைவசமயப் பணிகள் எவை? என்பதற்கு விடை பகர்ந்து வாழ்ந்து கொண்டு இருக்கும் அன்னையை எல்லாம் வல்ல துர்க்கை அம்பாள் வழி நடத்தி வருகின்றாள் என்பது பெரும் உண்மையே.

வெறுமனே சமய பேச்சளராக இருக்காது சமூகத்திற்கு அறிவு புகட்டுபவராக, சிறுவர்களை வழி நடத்துபவராக இளைஞர் யுவதிகளை நெறிப்படுத்துபவராக, பெண்களுக்கு முன்னுதாரணமானவராக, சமூக சீர்திருத்தவாதியாக, அநாத ரட்சகியாக, அறப்பணிகளை நிலைநிறுத்துபவராக வாழும் அன்னைஆற்

(2ம் பக்கம் பார்க்க)

**வேதவல்லி செல்வரத்தினம்**

### தோன்றில், புகழொடு தோன்றுக!

தெல்லியூர் தன்னில் தோன்றி
புன்னகை தவழும் பொன்முகமும்
இன் சொல் பேசும் பண்பழகும்
கண்ணியம் நிறைந்த கடமையுணர்வும்
கொண்ட துர்க்கா துரந்தரியே!

அன்பே உருவான நின்சேவை
அமுதென அனைவரும் போற்றும் இவ்வேளைதனில்
ஏழை மழலைகளை அன்புடன் அரவணைத்து
ஏக்கமின்றி இம் மண்ணுலகில் வாழும்வரை
புகலிடமளித்த பாசமுறு துர்க்கா துரந்தரியே!

அகவை எழுபத்தியாறு தனில்
காலடிவைத்து நின் சேவை
அளவு நூறுதனில் பார் புகழப் பரந்தோங்க
துர்க்கையம்பாள் துணை வேண்டி
நிற்போம் தாயே!

**காசியண்ணர்**


76-வது பிறந்த நாள்
அறக்கொடை விழாக் காணும்

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி
தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்கள்

பல்லாண்டு காலம் வாழ
துர்க்கா தேவியை வேண்டுகிறோம்.

**திருமகள்**
**அழுத்தக ஊழியர்கள்**
**சுன்னாகம்.** (கி-932)



சிவஞான வித்தகர் கலாநிதி
**தங்கம்மா அப்பாக்குட்டி**
அவர்கள்

நீடூழி காலம் வாழ்ந்து
சைவத்துக்கும், தமிழுக்கும் தொண்டுகள்
பல புரிந்திட எல்லாம் வல்ல
துர்க்காதேவி அருள்பாலிக்க வேண்டுகிறோம்.

**சுன்னாகம்**
**ப. நோ. கூ. சங்கம்**
**சுன்னாகம்.** (கி-934)


### தங்க அன்னையே, வாழி பல்லாண்டு!

அன்னை துர்க்கையின் அற்புதத் தொண்டராய்
அமைந்து பொலிந்திடும் தங்க அன்னையே!
அன்னை மொழிக்கும் சிவத்திரு நெறிக்கும்
அளவிலாப் பணிகள் ஆற்றிடும் அன்னையே!
அன்னை மண்ணில் அகதியாய் ஆனவர்க்கு
ஆதரவுக்கரம் கொடுத்திடும் அன்னையே!
அன்னை சக்தியின் பேரருளாலே
ஆண்டு பல்லாண்டு வாழ்க எம் அன்னையே!

**நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்**

### வாழி பல்லாண்டு

தங்கம்மா நாமங் கொண்டிலங்கி
தரணியில் தமிழ் சொல்லும் செல்வி
மங்கையர் போற்றி ஏற்றும வண்ணம்
மகிழ்வுறும் பணி செய்யும் செல்வி
சிங்க மிசை யூரும் தேவி நல் அருளால்
சீர்கள் பல பெற்ற செல்வி
எங்கும் புகழ்பெற்றும் தங்கம்மாவே
எழிலுடன் வாழி பல்லாண்டு.

**சங்கரத்தையூர் சி. சபாநாதன்**

### தழைத்தது சைவம்

பங்கமிலா எண்ணத்தினால் பாங்கான சிந்தையினால்
சிங்காசனத் துர்க்கையவள் விரும்பினாள் -ஆங்கதனால்
தங்கம்மா எனும் தலைவி தக்கதாய் வழிகாட்ட
எங்குமே தழைத்தது சைவம்.

**அளவையூர் கே. எஸ். சிவஞானராஜா**


76-வது அகவையில் காலடி பதிக்கும்
தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும்

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி
**தங்கம்மா அப்பாக்குட்டி**
அவர்கள்

பல்லாண்டு காலம் வாழ துர்க்கை அம்மனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**தெல்லிப்பழை**
**ப. தெ. வ. அ. கூ. சங்கம்**
**துர்க்காபுரம்-தெல்லிப்பழை**
(கி-933)

# நிதிஉதவியும் ஆயுதவருகையும் தடைப்பட்டால் யுத்தம் நின்றுவிடும்

## ஆங்கில நாளிதழுக்கு கதிர்காமர்பேட்டி

(கொழும்பு)
தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மேற்குலக நாடுகளிலிருந்து கிடைக்கும் நிதியை நிறுத்தி, கடற்பிராந்தியத்தில் கடற்படையினரின் கண்காணிப்பை அதிகரித்தால் குறுகிய காலத்தில் புலிகள் தாங்களாகவே யுத்தத்தை நிறுத்திக்கொள்வர்.

இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் புலிகளின்யுத்த நிறுத்த அறிவிப்பு தொடர்பாக டெய்லி நியூஸ் ஆங்கிலநாளிதழுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் அப்பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

மேற்கு நாடுகளிலிருந்து கிடைக்கும் நிதியும் ஆயுத உபகரணங்களின் வருகையும் தடைப்படுமானால் விடுதலைப்புலிகள் தாங்களாகவே யுத்தத்தை நிறுத்திக் கொள்வர்.

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பு ஒரு சந்தர்ப்பவாத நடவடிக்கையாகும். இவ்வறிவிப்பை புலிகள் நோர்வே மூலமாக எம்மோடு ஆலோசித்த பின்னரே வெளியிட்டிருக்க வேண்டும். அவ்வாறு செய்யாது தாம் நினைத்தவாறு யுத்தநிறுத்த அறிவிப்பை வெளியிட்டிருப்பது உலக நாடுகளின் பாராட்டையும் ஆதரவையும் தம் வசப்படுத்திக் கொள்ளவே என்றும் தெரிவித்த கதிர்காமர் யாழ்குடாநாட்டில் அரச படையினரின் நடவடிக்கைகளை தாமதப்படுத்தும் ஒரு தந்திரோபாயமுமே இவ் யுத்தநிறுத்தமென்றும் மேலும் தெரிவித்துள்ளார் (இ)

# வாகனங்கள் அன்பளிப்பு

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் அலுவலகப் பாவனைக்கென 'லன்ட் குறூசர்' வாகனமொன்றையும், 'டொல்பின்' வாகனமொன்றையும், சி. ஜி. 125 ரக இரண்டு மோட்டார் சைக்கிள்களையும், ஹிரோ கொண்டா மோட்டார் சைக்கிள் ஒன்றையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இது தவிர தொலைக்காட்சிப் பெட்டி, குளிர் சாதனப் பெட்டி, மற்றும் பல உபகரணங்களையும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

# இராணுவ சிப்பாய் உட்பட 8பேர் விளக்க மறியலில்

(யாழ்ப்பாணம்)
இராணுவ சிப்பாய் உட்பட எட்டுப் பேரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அச்சுவேலிப் பகுதியில் இடம் பெற்ற பாலியல் சம்பவம் ஒன்றில் கைது செய்யப்பட்ட துகுலன்பேடிகே அஜித்குமார மற்றும் பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்களான இராஜமனோகரன் தயாகரன் கார்த்திகேசுகுலேந்திரன் வல்லிபுரம்கருணாகரன், கின்னத்துரை விஜபரூபன், செல்வராசாமணிவண்ணன், சின்னத்தம்பி தயாபரன், கார்த்திகேசு சுஜிந்தன்ஆகியோரைசட்டமா அதிபரின் அறிவுறுத்தல்வரும் வரையும் யாழ். சிறைச்சாலையில்வைக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை உரும்பிராய் பகுதியில்இடம்பெற்ற திருட்டுச்சம்பவத்துடன் தொடர்புடையவர் என்றுசந்தேகிக்கப்படும் கந்தசாமி ஜெயதாஷன் என்பவரைமறியலில் இடுமாறு உத்தரவிட்ட நீதவான் பின்னர்அவரைபிணையில் செல்ல அனுமதித்தார். (ர2,

# இளவாலையில்படையினர் தேடுதல் முயற்சி

(யாழ்ப்பாணம்)
இளவாலைப் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

காலை வேளை இராணுவ வாகனங்கள் மற்றும் சைக்கிள்களில் அப்பகுதிக்கு வந்த ஏராளமான படையினர் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் விடுத்தபின் தேடுதல் நடத்தியுள்ளனர்.

இந் நடவடிக்கையின் போது இளைஞர் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்ட போதும் பின்னர் விடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-12)

# பனை அபிவிருத்திச்சபை தலைவர் மீள் நியமனம்

[யாழ்ப்பாணம்]
இலங்கை பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக ஏ.எம். பாக்கியநாதன் மீண்டும் வடக்கிற்கான அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகாரங்களுக்கான அமைச்சர் கௌரவ கே.என். டக்ளஸ் தேவானந்தாவினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்

கலைப்பட்டதாரியான இவர் கடந்த ஆறு வருடங்களாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவராகப் பதவி வகித்து வருவது குறிப்பிடத்தக்கது. வடமாகாண பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியான பனஞ்சாராயத்தினை தென்னிலங்கையில் அறிமுகப்படுத்தியதன் மூலம் பனைவளத் தொழிலாளர்களின் பொருளாதார, சமூக மேம்பாட்டிற்கு வழி வகுத்தார்.

இவரது பதவிக் காலத்திலேயே உற்பத்திப் பொருட்களின் தர நிர்ணயத்திற்கான சர்வதேச விருது, தங்கப் பதக்கம் ஆகியவற்றைப்பனை அபிவிருத்திச் சபை பெற்றுக்கொண்டது. அத்துடன் ஆராய்ச்சி அலகு மூலம் பல பனைசார் நவீன உற்பத்திப் பொருட்களும் கண்டு பிடிக்கப்பட்டன மேலும், யாழ். மாவட்டத்தில் பனைவள மேம்பாட்டிற்காக யு என். டி பி, யு என் எச் சி ஆர் ஆகிய வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்தும், மட்டக்களப்பு மாவட்டத்தில் நோறாட் [NORAD] முதலிய தொண்டு நிறுவனங்களிலிருந்தும் உதவிகள் பெற்று பல வேலைத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டன. (க)

# 48ஆயிரம் வாழைகள் முறிந்தன

(வவுனியா)
அண்மையில் வன்னிப்பகுதியில் சூறாவளியினால் கிளிநொச்சி, மல்லாவி ஆகிய இடங்களில்48ஆயிரம் வாழைகள் முறிந்துள்ளதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாயிரம் ஏக்கர்பரப்பில் பயிரிடப்பட்ட வாழைகளின் அழிவால் 96 இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5

## யாழ். மாவட்டத்தில்

# கிராம உத்தியோகத்தர் விரைவில் நியமனம்

(புலோலி)
யாழ். மாவட்டத்தில் வெற்றிடமாகவுள்ள கிராம சேவை உத்தியோகத்தர் பதவிகள் வெகுவிரைவில் நிரப்பப்படவுள்ளன.

இதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ். மாவட்டத்தில் பல கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவுகளில் நிரந்தர கிராமசேவை உத்தியோகத்தர்கள் இல்லாமையால் பொதுமக்கள் பலத்த சிரமங்களை அனுபவித்துவருவதாகப் புகார் செய்யப்பட்டதையடுத்தே வெற்றிடமாகவுள்ள இக்கிராம சேவை உத்தியோகத்தர் பதவிகளுக்கு புதிய உத்தியோகத்தர்களை நியமிக்கும் துரிதநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன (க 52)

## இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில்

# முஸ்லிம்களின் நிலைப்பாடு குறித்து நோர்வே தூதுவருக்கு விளக்கப்படும்

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)
இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் முஸ்லிம்களின் நிலைப்பாடு குறித்து நோர்வே தூதுவர் எரிக்சோல்ஹெய்மைசந்தித்து கலந்துரையாடவுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் இணைத் தலைவர்களுள் ஒருவரான அமைச்சர் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் முஸ்லிம்களின் நிலை குறித்து எவரும் இதுவரையில் கருத்து வெளியிடவில்லை.

நோர்வே தூதுவரின் பங்களிப்பை உரிய முறையில் பயன்படுத்தவேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (க)

# ஆண்டு விழா

(நெடுந்தீவு)
நெடுந்தீவு மேற்கு ஐக்கிய தீபம் சனசமூக நிலையத்தின் பதினைந்தாவது ஆண்டு நிறைவுவிழா கடந்த 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 7 30 மணியளவில் நிலையத் தலைவர் கோ. பகீரதன் தலைமையில் இடம்பெற்றது. உ-82)

# தமிழ்மக்களை அழிக்கும் அரசை ஆதரிக்கக்கூடாது

## சந்திரசேகரன்எம்.பி.கருத்து

(கொழும்பு)
பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவு வழங்கும் அனைத்து தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது ஆதரவை விலக்கிக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு மலையக மக்கள் முன்னணித் தலைவர் பி.சந்திரசேகரன் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கோரியுள்ளார்.

யுத்தத்தால் நாடு சீரழிந்து கொண்டிருப்பதுடன், சிறுபான்மை இனமக்களுக்கு அழிவை ஏற்படுத்தும் நடவடிக்கைகளும் அதிகரித்து வருகின்றன.

நாட்டின் சொத்துக்களை அழித்து பொருளாதாரத்தை சீரழித்துக் கொண்டிருக்கும் அரசு தெளிவற்ற கொள்கையுடன் செயற்படுகிறது. எனவே நாட்டின் எதிர்காலத்தையே ஆபத்தான நிலைக்கு இட்டுச் செல்லும் அரசுக்கு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது ஆதரவை வழங்கவேண்டாமென்று அவர் மேலும் கேட்டுள்ளார் (இ-5

## வடமராட்சியில்

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர் 38பேர் நியமனம்

[மந்திகை]
வடமராட்சி கல்வி வலயத்திணைக்களப் பாடசாலைகளில் உள்ள ஆங்கில ஆசிரியர் பதவி வெற்றிடங்களுக்கு பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் 38 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்

இவ்வலயப் பாடசாலைகளில் ஏற்பட்டிருக்கும் ஆங்கில ஆசிரியர் பதவி வெற்றிடங்களுக்கு கடந்தவருடம் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்களுக்கே 2ம் திகதி முதல் மீள நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவராஜா தெரிவித்துள்ளார். [ச-23]

# தொண்டர் ஆசிரியர்கள் எவரும் நியமிக்கப்படமாட்டார்கள்

## முதலமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)
வடமத்திய மாகாணப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்கள் நியமிக்கப்பட மாட்டார்கள் என்று முதலமைச்சர் லோகி பிறேமளா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

வட மத்திய மாகாணப் பாடசாலைகளில் தற்சமயம் பலர் தொண்டர் ஆசிரியர்களாகப் பணிபுரிந்துவருகின்றனர். இவர்கள் எதிர் நோக்கும் நியமனப் பிரச்சினையை முன்வைத்தே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது நியமனம் தொடர்பான இவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயற்சிகள் நடை பெறுகின்றன இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்ட பின்னரே புதிய நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் என்று முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

இந்த உத்தரவை மீறி பாடசாலை அதிபர்கள் தொண்டர் ஆசிரியர்களை சேர்த்துக் கொண்டால் அவர்களுக்கு எதிராகத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனை அடுத்தே இந்த நடைமுறை தற்போது அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# குற்றவாளிகளை நாடுகடத்தல்

(கொழும்பு)
அமெரிக்காவுக்கும், இலங்கைக்குமிடையில் குற்றவாளிகளைப் பரஸ்பரம் நாடு கடத்தும் ஒப்பந்தத்தை அங்கீகரிக்கும் விடயத்தில் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் கைச்சாத்திட்டுள்ளதாக இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சை மேற்கோள் காட்டும் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-04)

# தையல் பயிற்சி ஆரம்பம்

(ஊர்காவற்றுறை)
வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில், தையல் டிப்ளோமா பயிற்சி அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (உ-75)

## இன்று ஒரு தகவல்

# தலைவனுக்குத் தகுதி தேவை

ஒரு கிராமத்தில் வாழும் சாமிக்கும் ஆசாமிக்கும் வழி காட்டவும், ஆலோசனை கூறவும் ஒரு தலைவன் இருந்திருக்கிறான் என்பது யாமறிந்த உண்மை. அது போன்றே சமகாலத்திலும், ஆலோசனை வழங்குபவனும் ஆலோசனை நாடியும் இருக்கவே செய்கின்றனர். இது பற்றிய விமர்சனமும் ஒரு காலத்தில் இருக்கவே செய்யும். எனவே, தற்காலத்தில் வாழ்கின்ற, வாழப்போகும் மக்களுக்குஎவ்வகையானவழிகாட்டல்களையும், ஆலோசனைகளையும்பெறலாம் என்பதை விளக்க ஒரு கதை.

ஒரு கிராமத்தில் வாழ்ந்த மக்கள் தமக்குத்தலைவனாக ஒருவனைஏற்றுக்கொண்டார்கள் நீதி விடயங்களில் அக்கிராமம் இவரது கட்டுப்பாட்டின் கீழேயே இருந்தது. எந்தவொரு நல்ல காரியமோ, கெட்ட காரியமோஇவரிடமே ஆலோசனை பெறவேண்டும்.

அக்கால மரபின் படி தலைவனிடம் ஒரு யானை இருக்க வேண்டும். சாரத்துடன் கழுத்திலே ஒரு சால்வை வேண்டும் தடித்த உருவமாயும் தலை சீவிக் கொண்டை முடிந்தும் இருக்க வேண்டும். ஒட்டுமொத்தமாகத் தலைவனுக்குரிய அத்தனை அம்சங்களும் அவனிடம் இருந்தன. நீதி விசாரணையில் இவரது தீர்ப்பே இறுதியானது. அப்பீல் செய்ய முடியாது.

ஒரு நாள் ஒரு ஆடுபக்கத்து வீட்டுக்குச் சென்று, அங்குள்ள பானையுள் தலையைப்புகுத்தி விட்டது, அதன்தலைபானைக்குள், மாட்டிக் கொண்டது. இந்த இழுபறியைத்தீர்ப்பதில் இரு வீட்டார்க்குமிடையே பிணக்கு. எனவே, இவர்கள் தங்கள் தலைவரின் வழிகாட்டலையும் ஆலோசனையையும் நாடினர் தலைவர் சம்பவ இடத்துக்குத்தாம் நேரடி விஜயம் செய்தேதீர்ப்பினைக் கூற வேண்டும். என்றார். அவ்விடத்துக்குத் தனது யானையிலேறித் தலைவர் வந்தார். தீர்ப்பைப் பார்க்க ஒரே மக்கள் கூட்டம்.

வீட்டுப் படலைக்கு வந்த தலைவர், யானை உட்செல்ல வீட்டுப்படலை போதாது எனவே, வசதியாக வேலியை வெட்டுங்கள் என்றார். வேலி வெட்டப்பட்டது, உள்ளே இன்னும் செல்ல தலைவாசல் இடையூறாகவிருந்தது. அதன் ஒரு பகுதியைப் பிடுங்குமாறு உத்தரவிட்டார். அதுவும் பிடுங்கப்பட்டது முற்றத்துக்கு வந்த தலைவர் சற்று நேரம் யோசித்தார். வெற்றிலை பாக்குடன் தட்சணை வந்தது, பெற்றுக்கொண்டார்.

இறுதித் தீர்ப்பை மக்கள் கூட்டம் ஆரவாரத்துடன் எதிர்பார்த்தது தலைவர் வேலைக்காரனை அழைத்தார். பானைஉடையாதவாறு ஆட்டின் தலையை வெட்டி, அதன்பின் தலையைவெளியே எடுக்குமாறு கூறினார். ஆட்டின்தலையும் கீழேவிழுந்தது. பானை உடைந்தது. ஆடு மரணமாயிற்று. தலைவரின் யானை மெதுவாக வெளியே அசையத் தொடங்கியது. தலைவர் விடைபெற்றார். பார்வையாளர்களுக்கு மகிழ்ச்சிஉரிமையாளர்களுக்கு அதிர்ச்சி.

எனவே வழிகாட்டலுக்குப் ஆலோசனைக்கும், வழிகாட்டுபவனுக்கும், காட்டப்படுபவனுக்கும், ஆலோசனைவழங்குபவனுக்கும், வழங்கப்படுபவனுக்கும் ஒரு தகுதி வேண்டும் என்பதை எல்லோரும் உணர வேண்டும்.

தொகுப்பு
மு. விக்கினேஸ்வரன்
கோப்பாய்

# யாழ். வைத்தியசாலைக்கு முன்பாக தரித்து நிற்கும் வாகனங்கள் அகற்றப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனாவைத்திய சாலைக்கு முன்பாகவுள்ள காந்தி சிலைக்கு அண்மையில் வாகனங்கள் தரித்து நிற்பதை அகற்றுவதற்கு பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வைத்தியசாலை வாகனங்கள் செல்லும் நுழைவாயில் பகுதியிலுள்ள வீதியின் முன் பக்கத்தில் வாடகை வாகனங்கள் தரித்திருந்து சிரமத்தை ஏற்படுத்துவதனாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதற் கட்டமாக நேற்று அப்பகுதியில் இருந்தவாகனங்களை அப்புறப்படுத்தி உரிய இடத்தில் வாகனங்களை தரிக்குமாறும், அவ்வாறு இனிமேல் நடந்துகொள்ளாவிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-12)

# வடமராட்சி கிழக்கில் கலை, கலாசார பேரவை

### அண்மையில் அங்குரார்ப்பணம்

(புலோலி)

வடமராட்சி கிழக்கு கலை கலாசார பேரவை அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் மேற்படி உதவி அரசாங்க அதிபர் வீ. பீ வேலாயுதபிள்ளை தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடமராட்சி கிழக்கில் பாரம்பரிய கலைகளுக்கு இன்று உயிரூட்டிக் கொண்டிருக்கும் கலைஞர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

பாரம்பரிய கலைகள் வளர்ப்பதில் முழு மூச்சுடன் பாடுபட்டுவரும் பலருக்கும் இந்நிகழ்வின்போதுசான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் மேற்படி கலைஞர்களின் ஆக்கங்களை ஒலிநாடாவில் பதிவு செய்யும் நிகழ்வும் அன்றைய தினம் இடம்பெற்றது.

அத்துடன், வடமராட்சி கிழக்கு கலை கலாசார பேரவையின் தலைவராக உதவி அரசாங்க அதிபர் வீ. பீ வேலாயுதபிள்ளையும் உப தலைவராக பிரதேச சபை செயலாளர் ஏ. நடராஜாவும் செயலாளராக செல்வி ஏ. மலாசினியும் தெரிவு செய்யப்பட்டனர். (உ-52)

# மிருசுவில் படுகொலை சம்பவம்

# ஐ.நா. செயலருக்கு மகஜர்

(வவுனியா)

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்டபடுகொலைச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஐக்கிய நாடுகள் செயலர் கோபி அனானிற்கு மகஜர் அனுப்பிவைத்துள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

மிருசுவில் பகுதியில் வயது வேறுபாடற்ற நிலையில் ஈவு இரக்கமற்ற முறையில் ஐந்து வயதுப் பாலகனுட்பட எட்டுப்பேர் சைகாலகள் கட்டப்பட்டு, அடித்தும் வெட்டப்பட்டும் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டமை, தமிழர் என்ற ஒருகாரணத்துக்காகவேயாகும்.

இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மீளக் குடியமர வருமாறு அழைத்து மனிதநேயமற்ற முறையில் கொல்லப்பட்டமை கண்டிக்கத்தக்க செயலாகும் என்று அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுளது (வ)

## திருவெம்பாவை

(யாழ்ப்பாணம்)

நீர்வேலிகந்தசுவாமி கோவிலில் திருவெம்பாவை உற்சவம் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது. (உ)

## திருவெம்பாவை பஜனை

(கோப்பாய்)

அதிகாலை வேளையில் திருவெம்பாவை பஜனை பாடும் தொண்டில் கோப்பாய் பகுதியைச் சேர்ந்த இரண்டு ஆலயத்தின் தொண்டர்கள் ஈடுபட்டு வருகின்றனர். ஆரம்பநாள் தொடக்கம் கிராமத்தின் கூடுதலான வீதிகளில் இவர்கள் இப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இறுதி நாள், கோப்பாய் மாணிக்க வாசகர் மன்றத்தினரின் ஏற்பாட்டில் சுவாமிகளின் உருவப்படம் தாங்கிய ஊர்தி அதிகாலை வேளை கிராமத்து வீதிகளில் ஊர்வலமாக எடுத்து வரப்படும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது (ச-79)

## இன்று கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மனித நேய அமைப்புக்களின் இணையத்தினால், சமாதானத்தை வலியுறுத்தி மக்கள் எழுச்சியை வெளிப்படுத்துவதற்கான கலந்துரையாடல் ஒன்று இன்றைய தினம் மு.ப. 10 மணிக்கு மேற்படி இணைய அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்துவதற்கு பல்கலைக்கழக சமூகத்தால் முன்னெடுக்கப்படும் எழுச்சி நிகழ்வில் ஒன்றிணைந்த செயற்பாட்டிற்கு பங்களிப்பு வழங்குவது சம்பந்தமான கலந்துரையாடலாக இது அமைவதானால், அரசசார்பற்ற பொது நிறுவனங்கள், மனிதநேய அமைப்புக்கள், சமய நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் பொது அமைப்புக்களை இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு யாழ். மனிதநேய அமைப்புகளின் இணையம் கோரிக்கை விடுத்துள்ளது. (உ)

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க நிர்வாக சபை உறுப்பினர்களுக்கான விசேட கலந்துரையாடல் எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு பழம் வீதி கந்தர் மடத்தில் உள்ள சங்க அலுவலகத்தில் இடம்பெற உள்ளதாக மேற்படி சங்க தலைவர் வே. மணிமாறன் தெரிவித்துள்ளார். [க]

# அமரர் குமாரின் நினைவாக விஷேட நிகழ்வுகள்

(சங்கானை)

கடந்தவருடம் படுகொலை செய்யப்பட்ட அ.இ த. காங்கிரஸ் தலைவரும், பிரபல சட்டத்தரணியுமான அமரர் குமார் பொன்னம்பலத்தின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி கடந்த வெள்ளிக்கிழமை வடக்கு -கிழக்கு உட்பட கொழும்பு மாவட்டத்திலும் விஷேட கூட்டங்களும் வழிபாடுகளும் இடம்பெற்றன

இதேவேளை கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளரும், யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளருமான சதாசிவம் ஐங்கரன் குமாரின்நினைவாக வலி. மேற்கில் உள்ள வறிய பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கியுள்ளார். (ப-18)

## அபிவிருத்திக் கூட்டம்

(புலோலி)

பருத்தித்துறை பிரதேச செயலகப் பகுதியிலுள்ளகமக்காரர் அமைப்புகளுக்கான அபிவிருத்திச்செயற்பாடுகள், கூட்டமொன்று பருத்தித்துறை ஈ பி டி பி அமைப்பாளரும், பருத்தித்துறைபிரதேச சபை பதில் தலைவருமான பரஞ்சோதி இரவீந்திரன் தலைமையில் பொதுஜன நூலக மண்டபத்தில் நடைபெற்றது

யாழ் கமகலச் சேவை திணைக்கள தலைமைக்காரியாலய பெரும்பாக உத்தியோகத்தர் எஸ் உருத்திரேஸ்வரன் புலோலி பெரும்பாக உத்தியோகத்தர், புலோலி விவசாயப் போதனாசிரியர் உட்பட விவசாயத் திணைக்களஉத்தியோகத்தர்கள் இக்கூட்டத்திலே சமுகமளித்திருந்தனர். (க-52)

## பல்கலை மதிலுடன் பாறியமரம்

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதத்தில் பெய்த கடும்மழை, புயல் காரணமாக யாழ். இராமநாதன் வீதிக்கடவையில் ஓங்கி வளர்ந்துநின்ற பிரமாண்டமான அரசமரமொன்று பாறியநிலையில் பல்கலைக்கழக மதிலுடன் சாய்ந்துள்ளது. (உ-4)

## குடிமனைகளில் புகும் பாம்புகள்

(வவுனியா)

கிளிநொச்சி தர்மபுரம் மருத்துவமனையில், பாம்பு தீண்டியதால் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

நாளொன்றிற்குச் சராசரி இருவர் பாம்புக் கடிக்குள்ளாகி சிகிச்சை பெறுவதாகவும், கடும் மழையினால் பாம்புகள் குடிமனைகளில் அதிகமாகப் புகுந்துள்ளதனாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (உ - 5)

## மரணமானார்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனாவைத்தியசாலையில் கடந்த மாதம் 18 ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட நபர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

எவருடைய உதவியுமின்றித் தானாகவே வைத்தியசாலைக்கு வந்து, வாட்டில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த கே. வேலு என்பவரே இம்மாதம் 3 ஆம் திகதி உயிரிழந்துள்ளார்

இந் நபர் தொடர்பான மேலதிக விபரங்கள் தெரியாமையினால், சடலம் வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ச)

## ‘சக்தி’ வெளியீடு

[யாழ்ப்பாணம்]

போரூட் யாழ். மேற்கு திட்டத்தால்வெளியிடப்படும் ‘சக்தி’ காலாண்டு இதழ் பல்வேறு அம்சங்களுடன் வெளிவந்துள்ளது

இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், மற்றும் போரூட் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட சமூகத்திட்டங்கள், மதுவினால் ஏற்படும் சாதக பாதக விளைவுகள் குறித்த விளக்கங்களும் இந் நூலில் காணப்படுகின்றன. (உ)

## திருவாதிரை உற்சவம்

தெல்லிப்பழை சித்தியம் புளியடி சித்தியம்பதி அருள்மிகு கண்ணமார் தேவதஸ்தானத்தில் வரும் 09 ஆம் திகதி திருவாதிரை உற்சவம் இடம்பெறவுள்ளது

அன்று அதிகாலையில் விசேட அபிஷேகப் பூசையும் திருவூஞ்சலும் சுவாமி வெளிவீதி வலம்வருதலும் நடைபெறும்.

புதன்கிழமை 10 ஆம் திகதி விசேட பூசையுடன் சுவாமி கிராம ஊர்வலம் இடம்பெறும். (ச)

## கொல்களம்

(புலோலி)

பருத்தித்துறை நகரசபை சுமார் 3 இலட்சம் ரூபா செலவில் பருத்தித்துறை கடற்கரையில் கொல்களம் ஒன்றை அமைத்துள்ளது. (உ-52)

## வருடாந்த ஒன்றுகூடல்

(சங்கானை)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு இம்மாதம் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9. 30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலரும் நலன்புரிச் சங்கத் தலைவருமான ந வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ளது

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக அரச அதிபர் க. சண்முகநாதனும் சிறப்பு விருந்தினர்களாக மேலதிக அரசஅதிபர் து. வைத்திலிங்கம், திட்ட பணிப்பாளர் செ. மகாலிங்கம், மாவட்ட சமுர்த்தி உதவிஆணையாளர் ந சிவபாதசுந்தரம் ஆகியோரும் மற்றும் செயலக அதிகாரிகளும், சகல பிரதேச செயலர்களும் பங்குபற்றுவர். (ச-24)

# செய்தித் துளிகள்

## வீதி ஒழுங்கில் மாணவர்

(இணுவில்)

இணுவில் மத்திய கல்லூரி மாணவர்கள் வீதி ஒழுங்கினைப் பேணுவதில் ஈடுபட்டுள்ளனர்.

இக் கல்லூரிக்கு முன்பாக வீதி விபத்துக்கள் இடம்பெறுவதைத் தவிர்க்கும் முகமாகவே கடந்த 2 ஆம் திகதியிலிருந்து காலை, மாலை ஆகிய இரு வேளைகளில் வீதி ஒழுங்கு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் இவ் வீதியால் பயணிக்கும் மாணவர்கள், அரச ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் விபத்துக்களைத் தவிர்த்து இலகுவாகப் போக்குவரத்தினை மேற்கொள்ள முடியும்.

(ச-49)

## சமாதான நீதவான் நியமனம்

(சுண்டிக்குளி)

யாழ். பாங்சால் வீதியை சேர்ந்த ஞானப்பிரகாசம் அருளானந்தம் அண்மையில் யாழ். மாவட்ட நீதிபதி கே திருநாவுக்கரசு முன்னிலையில் யாழ் மாவட்ட சமாதானநீதவானாக சத்தியப்பிரமானம் செய்து கொண்டார்.

யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவரான இவர், யாழ். ஐக்கிய வியாபார சங்கத்தின் முன்னாள் உதவி முகாமையாளரும் மனித முன்னேற்ற நடு நிலைய அதிகாரியும் புனித மரியாள் பேராலய மேய்ப்பு பணிச்சபை உறுப்பினரும், வின்சன் டிப்போல் சபை உறுபினருமாவார்.

(உ-110)

## கல்வி பணிப்பாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

சிவத்தமிழ்ச்செல்விதங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்த நாள் அறநிதியத்திற்கு மாணவர்கள் பெயர்களை கொடுத்த பாடசாலை அதிபர்கள் அனைவரும் இன்று பிற்பகல் 1.30 மணியளவில் தெல்லிப்பழை துர்க்காதேவி அன்னபூரணி மண்டபத்தில் சமுகமளித்து பரிசு நிதியத்தை பெற்றுக் கொள்ளுமாறு யாழ். கல்வி வலய பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(க)

## வீதிகள் துப்பரவு

(ஈச்சமோட்டை)

மந்திகைச் சந்தியிலிருந்து புலோலி, கொடிகாம, கச்சாய் வரையான வீதிகளின் துப்பரவுப் பணிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பளைப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

வீதி ஓரங்களில் காணப்படும் மணல்திட்டுகள் மற்றும் பற்றைகள் அகற்றப்பட்டுமழைநீர்வீதியில்தேங்கா வண்ணம் இருப்பதற்கே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(ச-59)

## நன்றி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த வருட க. பொ. த (சா/த) பரீட்சையை ஒட்டி, மட்டுவில் இந்து இளைஞர் மன்றத்தால் நடத்தப்பட்ட பரீட்சை முன்னாயத்த வகுப்புகளுக்கு சகல வகைகளிலும் ஒத்துழைத்த அனைவருக்கும் சம்பந்தப்பட்ட இளைஞர் மன்றத்தினரால் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## சமுர்த்தி செயலணிக் கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே-108நல்லூர் தெற்கு கிராமசேவகர்பிரிவில் சமுர்த்தி செயலணி அமைக்கும் கூட்டம் எதிர்வரும்9 ஆம் திகதிசெவ்வாய்க்கிழமை பிற்பகல் 3. 00 மணிக்கு நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

இதேதினம் காலை 9 30 மணிக்கு ஜே-112 திருநெல்வேலி தென்கிழக்கு, ஜே-106 நல்லூர் வடக்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளுக்கான செயலணிக்கூட்டம் செங்குந்தா இந்துக்கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

வலய முகாமையாளர் ந சிவகுமார் தலைமையில் நடைபெறும் மேற்படி கூட்டங்களில் பிரதேச செயலர் கலாநிதி க. குணராசா கலந்து கொள்ளவுள்ளார்.

எனவே மேற்படி கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்ட இளைஞர், யுவதிகளைத் தவறாதுகலந்து கொள்ளுமாறு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கேட்டுள்ளனர்.

(உ-3)

## வலய கல்விப் பணிப்பாளர்கள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

வலயங்களுக் கிடையிலான ஆசிரிய இடமற்றங்களைத் தீர்மானிப்பதற்கான இடமாற்றச்சபைக் கூட்டம் இம்மாதம் 18ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதற்கமைவாக வலயத்திற்கு தேவையான ஆசிரியர் விபரம்,தற்போதைய ஆசிரியர் விபரம் இன்னும் தேவையான அல்லது மேலதிகமான ஆசிரியர் எண்ணிக்கை ஆகியவற்றை பாடரீதியாகவும் வகுப்பு ரீதியாக மாணவர் தொகையையும்இம்மாதம் 15 ஆம்திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்குமாறு சகல வலயகல்விப் பணிப்பாளர்களையும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கலாநிதிஎஸ்.என்.தணிகாசலம்பிள்ளை கேட்டுள்ளார்.

(உ)

## உள்ளூராட்சி திணைக்களம் வேண்டுகோள்

யாழ் மாவட்டத்திலுள்ள சகல சனசமூக நிலையங்களும் 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ம் திகதிக்கு முன்னர் பொதுக் கூட்டங்களைக் கூட்டி புதிய செயற்குழுக்களைத் தெரிவுசெய்த விபரங்களை யாழ் உள்ளூராட்சித் திணைக்களத்திற்கும், உள்ளூராட்சி மன்றங்களுக்கும், சனசமூக நிலையங்களின்சமாசங்களுக்கும் அனுப்பி வைக்குமாறு யாழ். உள்ளூராட்சித் திணைக்களம் கேட்டுள்ளது.

(க-52)

## உரிமத்தகடு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையினால் 2001 ஆம் ஆண்டிற்கான வாகனங்களுக்கான, உரிமத் தகடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

உரியவர்கள் அதனைப் பெற்று சிரமங்களைத் தவிர்க்குமாறு நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் செல்வரத்தினம் கேட்டுள்ளார்.

(உ)

# இராணுவத் தளபாடங்கள் கொள்வனவிற்கு தயார்

## வியட் நாம் அறிவிப்பு

(ஹனோய்)

வியட்நாம் இந்தியாவிடமிருந்து இராணுவ ஆயுதங்களை வாங்க விருப்பம் தெரிவித்துள்ளதாக அந் நாட்டுத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக இந்தியா அணு சக்தியையும் இந்தியாவிலிருந்து பெற்று பயனுள்ள முறையில் பயன்படுத்துவதற்கு கேட்க இருப்பதாக வியட்நாம் செய்திகள் தெரிவித்துள்ளன.

வியட்நாமுக்கு மூன்று நாள் விஜயமாக இன்று இந்திய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் செல்ல இருப்பதாகவும் அங்கு இந்திய வியட்நாம் வளர்ச்சிக்காக பேச்சுவார்த்தைகள் இடம்பெற இருப்பதாகவும் பொருளாதார வர்த்தக ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட இருக்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வியட்நாமில் மசகு எண்ணெய் உற்பத்திகூட, இருப்பதால் இந்தியா எண்ணெய் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட இருக்கிறது.

வியட்நாம் ஒப்பந்தம் திங்கள் கைச்சாத்திடப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாஜ்பாயின் வியட்நாம் வருகையில் இரு நாட்டுப் பொருளாதாரமும் உறவும் பலம் பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

(து)

## வேலையற்றோர் தொகை அமெரிக்காவில் அதிகரிப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் வேலையில்லாதோர் தொகை நாலு வீதத்தால் கூடிவிட்டதாக அறிவிக்கப்படுகிறது

நாட்டிலே உற்பத்திகள் குறைந்துவிட்டன வென்றும் தொழிற்சாலைகளில் விருத்திகள் குன்றிவிட்டன வென்றும் தெரிவிக்கப்படுகிறது

2001 ஆம் ஆண்டில் மேலும் பொருளாதார நெருக்கடிகள் ஏற்படுமென்றும் வேலையற்றோர் தொகை அதிகரிக்கலாமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

(து)

உலக தரிசனம்

## அமெரிக்க சமாதான முயற்சியை எதிர்க்கும் மத்திய கிழக்கு நாடுகள்

(ஜெருசலேம்)

அமெரிக்கா மத்திய கிழக்கு சமாதானத்துக்காக மும்முரமாக முயற்சிக்கும் போது இஸ்ரேலியரும் பலஸ்தீனியரும் ஆர்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

அமெரிக்க அதிபர் இம்மாதம் இருபத் தொன்பதாம் திகதி ஓய்வுபெறுவதற்கு முன் பலஸ்தீனியருக்கு நிபந்தனையுடன் கூடிய பேச்சுக்கு உடன் படவைத்ததை பலஸ்தீன மக்கள் வன்மையாகக் கண்டித்தனர்.

நேற்று ஆயிரக் கணக்கான பலஸ்தீனர்கள் . வீதிகளில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்தினர். அந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் போது இஸ்ரேல் – பலஸ்தீன சமாதானப் பேச்சு வேண்டாம் இவ்வளவு உயிர்களை இழந்துவிட்டு பேச்சுவார்த்தையா என்று கோஷமிட்டுக்கொண்டு சென்றனர்.

இதேவேளை இஸ்ரேலியர்கள் ஆயிரக்கணாக்காகத் திரண்டு றபர் குண்டுகளால் தாக்கினார்கள்.

இருந்தும் அமெரிக்க அதிபர் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து நடத்தி சமாதானத்திற்கு வழிவகுக்க முயற்சித்த வண்ணம் இருக்கிறார்.

(து)

## தாய்லாந்தில் நேற்றைய தேர்தலில் 44 மில்லியன் மக்கள் வாக்களிப்பு

(பாங்கொக்)

தாய்லாந்தில் நேற்று நாடளுமன்றத்துக்கான தேர்தல் நடைபெற்றது.

நாற்பத்தி நான்கு மில்லியன் வாக்காளர்கள் இந்த தேர்தலில் வாக்கத்திருந்தனர்.

இப்போதைய பிரதமர் சுவான்லீக்பாய் தலைமையிலான கட்சியும் எதிர்தரப்புத் தலைவர் பாக்கின் சின்னபத்திரா அணியினரும் தேர்தலில் போட்டியிடுகிறார்கள்.

இத்தேர்தல் கடும் போட்டியாக இருப்பதாகவும் சிறு வித்தியாசத்தில் தான் யாரும் அரசினை அமைக்கமுடியுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

(து)

## இந்தியா – பாகிஸ்தானிடையே வேறுபாடுகளை போக்க பேச்சு

### விரைவில் ஆரம்பமாகும்

(புதுடில்லி)

இந்தியா- பாகிஸ்தான் தமது வேறுபாடுகளை போக்கும் பேச்சுக்களில் விரைவில் ஈடுபட இருக்கின்றன என்று காஷ்மீர் முதல்வர் பாருக் அப்துல்லா கூறினார்.

ஆனால் பேச்சுவார்த்தைகள் எங்கு எப்படி நடைபெறும் என்பதைக் கூற முடியாதென்று மேலும் தெரிவித்தார்.

இந்தியாவில் யுத்த நிறுத்த அறிவிப்பை பாகிஸ்தான் ஏற்றுக் கொண்டதால் தனக்கு நம்பிக்கையேற்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதன் பயனாக எல்லைப்புறங்களில் வாழும்சாதாரண மக்கள் சந்தோசமாக வாழ்வதாகவும் தான் அந்தக்காட்சியை நேரில் கண்டதாகவும் பாருக் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் யுத்த நிறுத்தத்தை இந்தியா இன்னும் நீடிக்க வாய்ப்பு இருக்கிறதென்று அப்துல்லா தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைகளில் சில கடினமான கட்டங்கள் இருக்கலாமென்றும் அவற்றை எல்லாம் எதிர்பார்த்து இரு நாடுகளும் பேச்சு வார்த்தைகளில் இறங்கும் மென்றும் முதல்வர் தெரிவித்தார்.

(து)

## பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு உதவுவதை இன்னும் நிறுத்தவில்லையாம்

### பாரதிய ஜனதா சாடுகிறது

(புதுடில்லி)

பாகிஸ்தான் தீவிரவாதக் குழுக்களுக்கு உதவுவதை இன்னும் நிறுத்தவில்லை யென்று பாரதிய ஜனதாக் கட்சிக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது

பாகிஸ்தான் எல்லைப்புறத்திலிருந்து விலகிவிட்ட போதும் பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டபோதும் தீவிரவாதிகளுக்கு உதவுவதை இன்னும் பாகிஸ்தான் நிறுத்தவில்லை யென்று அக்கூட்டத்தில் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்தியா எந்த நேரமும் எல்லைப் புறங்களில் விழிப்புடன் இருந்து வருகிறதென்றும் கட்சிக் கூட்டத்ல்தில் தெரிவிக்கப்பட்டது.

(து)

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் [illegible]

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்
- குறள்

# வலம்புரி

## அறங்காக்கும் அன்னை

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி அன்னை அப்பாக்குட்டி தங்கம்மாவின் 76 வது அகவை நாள் இன்றாகும். ஈழத்தில் சைவமும் தமிழும் வளர்த்த அன்னையின் சேவை வெறும் எழுத்துக்களால் வடித்தற்கரியது. அவரின் சேவை ஆத்மார்த்தமானது, எல்லையற்றது தியாக சிந்தையுடன் கூடியது.

அவரின் சேவையால் அர்ப்பணிப்பால் வறுமையின் பிடியில் சிக்குண்டு தவித்த எத்தனையோ ஏழைச் சிறுவர்கள் உயிர்ப்புப் பெற்றார்கள்.

கொடிது கொடிது இளமையில் வறுமை! கொடிது என்ற தமிழ்ப் பாட்டி ஒளவையின் பாடல் இளமையில் எழுந்த வறுமையின் தாக்கத்தை கோடிட்டுக்காட்டுகிறது. எனினும் அதற்குப் பரிகாரம் காணும் வழியை ஒளவை தனிலும் கண்டிலர்

ஆனால் ஈழத்தில் சிவத்தமிழ் அன்னையவர்கள் இளமையில் வறுமையை ஒழிக்கும் பணியைத் தானே முன்னின்றுசெயற்படுத்தினார். அதனால் ஏழைச்சிறுவர்கள் உய்வு பெற்றார்கள். அறம செய்ய விரும்பும் எத்தனையோ ஈகையாளர்கள் தம் கொடைகளை நம்பிக்கையோடு அன்னையின் அறப்பணிக்கு அனுப்பி வைத்தனர். இதன் மூலம் துற்றுயிருடன் ஆவி அகத்தோபுறத்தோ என்று நம் பூமியில் நிலைதடுமாறிக் கொண்டிருந்த அறப்பணியை - தர்மத்தை - மண்ணில் நல்லவண்ணம் வாழும் மகத்துவத்தை அவனியில் தடுத்து தங்க வைத்த பெருமை அன்னைக்கேயுண்டு.

வீடு தேடிச்சென்றும் தர்மத்திற்கு நிதிசேர்க்க முடியாத இக்காலகட்டத்தில், அன்னையின் அறப்பணிக்கு சர்வ நாடுகளிலிருந்தும் நிதி வந்துகுவிகிறதெனில்அதன்பொருள் என்ன என்பதை நாம் சிந்தித்தால் அன்னையின் அறப்பணியில் நம்பிக்கை உண்டு - தூய்மை உண்டு - அதனால் அறம் செய்தவர் மனதில்நிம்மதி உண்டு என்பதை உணரமுடியும்.

ஏழைகளுக்கும், ஏற்ற மிகு தர்மவாரிகளுக்கும் மன நிம்மதியைத் தந்தளிக்கும். சிவத்தமிழ் அன்னை அப்பாக்குட்டி தங்கம்மா வாழும் நாடு என்ற பெருமையில்- அவர் வாழும் காலத்தில் நாமும் வாழ்கின்றோம் என்ற நெஞ்சில் எழும் ஆனந்தத்தில், அன்னையின் அகவை 76ற்கு இறை ஆசி வேண்டுவோமாக.

★ பரமபிதா காட்டிய பாதை ★

# தூரத்தே தெரியும் சமாதான ஒளிக்கீற்று

# நம்பிக்கையுடன் எதிர்நோக்கும் அப்பாவிகள்



போர்முழக்கத்தின் அதிர்வுகள் தனிந்து காணப்பட, மனித மனங்களில் மகிழ்ச்சியின் ஒளியும் நம்பிக்கையின் செயல்பாடுகளும் புத்தாண்டின் பிறப்புடன் ஆரம்பமாகியுள்ளது. அமைதியில் மகிழ விரும்பும் மக்கள் சமாதானத்துக்கான ஒளிக்கீற்றுக்கள் தூரத்தே தெரிவதுகண்டுதற்காலிகமான அமைதியடைந்துள்ளனர். தமது நாளாந்த செயற்பாடுகளை உற்சாகத்துடன் முன்னெடுக்கின்றார்கள். இருந்தும் ஒரு சிலமனங்கள் இம்மகிழ்வான நிலையை வரவேற்பதாகத் தெரியவில்லை. புதினத்தாள்கள் புழுங்குகின்றன. மகிழவேண்டியவர்கள் வரட்டுக்கௌரவங்களை வாய்ப்பாடாக ஓதுகின்றார்கள் வழமைகளைப் பழமையாக்குகின்றனர்.

### யூதர்களின் அரசர்

இஸ்ராயேல் மக்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க பெத்தலேகேமில் இயேசு பிறந்திருக்கிறார். அவரதுபிறப்பின் அடையாளமாக வானத்திலே, வால் வெள்ளி தோன்றியது கண்டு வானியல்அறிஞர்கள் அச்செயலுக்கான காரணத்தை அறிய கீழ்த்திசையின் பல்வேறு பகுதிகளில் இருந்து புறப்பட்டனர் ஆனால் அவர்கள் பெத்தலேகேமை அண்மிக்கையில்ஒன்று சேர்ந்தனர். இவர்கள் இச்செய்தியை அரசனிடம் சென்று விசாரித்தனர். ''யூதர்களின் அரசன் பிறந்திருக்கிறாரே, அவர் எங்கே அவருடைய விண்மீன் எழுதலைக்கண்டு, அவரை வணங்கவந்தோம்'' என்றார்கள். (மத்- 2:2) இதனாலே அரசன்தனது ஆட்சிக்கு அச்சுறுத்தல் வந்துவிட்டதோ என்று அஞ்சினான். அவன் உண்மையை உணரவில்லை அச்செய்தியை அவன் தந்திர உபாயமாக ஏற்றான். இது இரண்டாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட செய்தியாகும்

### புதுவாழ்வு மலரட்டும்

இருபது வருடங்களுக்கு மேலாய் போரினாலே அல்லல்பட்டுஅகதிகளாய், அநாதைகளாய், இல்லிடமற்றவர்களாய்மாறிமாறித் தமிழினம் துன்பங்களை அனுபவித்து வரும் வேளையிலே, அமர்க்களம் ஓய்ந்திருப்பது அமைதிக்கான சூழ்நிலை ஆரம்பித்துள்ளது. அவநம்பிக்கைக்குரிய ஒன்றாக ஆகமாட்டாது ஒழிவு மறைவின்றி உள்ளங்கள் திறக்கப்பட்டு புதிய சகாப்தத்தை, புதிய புரிந்துணர்வை, புதியவிட்டுக்கொடுத்தலைக் கொடுப்பதன் மூலம் புதுவாழ்வு மலரும்.

### விடியலுக்காக ஏக்கம்

ஏரோதிடம் இருந்து புறப்பட்ட ஞானிகள் குழந்தை இயேசுவைக் கண்டு ஆராதித்தார்கள். தரிசனம் பெற்றார்கள். பரிசில்கள் கொடுத்தார்கள். பாதையை மாற்றித் தம் பயணம் தொடர்ந்தார்கள். எமது மக்களும் மண்ணும் புதிய விடியலுக்காக ஏங்குகின்றது. அமைதியின் தரிசனம் காண அங்கலாய்க்கின்றது. பிரிந்து போனஉறவுகளைக் கண்டு மகிழ ஏங்குகின்றது.

### நற்பணிகளை முன்னெடுப்போம்

தொடர்ந்தும் அழிவுகள் எம்மை ஆக்கிரமிக்காமல் இருக்க, அல்லலுறும் எம்மக்களின் சொத்துக்களையே அபகரிக்கின்ற அயோக்கியத்தனங்களை இனங்காண உதவும் கரங்களாக இருந்து சமூக முன்னேற்றத்துக்கு பாடுபடும் உள்ளங்கள் பெருக்கவும் நாம் எமது வீட்டின் அயல் சூழலிலே நற்பணிகளை ஆரம்பிப்போம்.

அன்ரனி பீற்றர்

# மனிதனின் குண இயல்புகளை அப்பட்டமாக வெளிக்கொணரும் எண் சோதிடக் கலை

சோதிட சாஸ்திரமும், கைரேகை சாஸ்திரமும் பொதுவாக வருங்காலத்தைப் பற்றித் தெளிவானகண்ணோட்டத்தை மட்டுமே அளிக்கக் கூடியவையாகும் இவற்றை விடச் சில வகை சிறப்பு அம்சங்கள் எண் சோதிடத்தில் அமைந்துள்ளன. வாழ்க்கையின் இரகசியங்களை எண் சோதிடத்தின் மூலம், யார் வேண்டுமானாலும் விளங்கிக் கொள்வதோடு, ஒவ்வொரு மனிதனின் குண இயல்புகள், சிறப்பு ஆற்றல் ஆகியவற்றையும் அறிந்து கொள்ளலாம். எண்களின் இரகசியங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அழுத்தமான ஓர் ஆர்வம் இருந்தால் தான், எண்களைப் பற்றித் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும் எண்ணும் எழுத்தும் மனித வாழ்க்கையின் ஏதோ ஒருஅம்சத்தைப் பிரதிபலித்து, காண்பிக்க உதவுகின்றன. இந்நாளில் எழுத்துத் தொடர்பான சாஸ்திரங்களிலும் எண்களைக் கொண்டே பலன் கண்டுபிடிப்பது, உலகம் முழுவதிலும் வழக்கமாயிருந்து வருகிறது.

## சோதிட பலன்

வானத்தில் சஞ்சரிக்கும் கிரகங்கள் கூட ஒன்று முதல் ஒன்பது வரையிலான எண்களுடன் தொடர்பு கொண்டிருக்கின்றனஎன்றஉண்மையை நாம் அறிய வேண்டும். எண் சோதிடத்தில் பூஜ்யத்திற்கு மதிப்போ, சிறப்போ இல்லை ஒன்றிலிருந்து ஒன்பது வரையிலான எண்கள் ஆதார எண்களாகும்.

4 ஆம் எண் இராகு கிரகத்திற்கான குணமுடையது என்றும் 7 ஆம் எண் கேது கிரகத்தின் குணமுடையது என்றும் சொல்வார். இதில் ஒரு நுட்பமான அம்சம் என்ன வென்றால், 1-4 2-7 என்னும் இந்த எண்களில் பிறந்தவர்களுள் ஒருவகையான நெருக்மான பாசணர்வு இழைந்தோடுவதோயகும்.

### எண்களின் பெருமை

இவ்வுலகிலுள்ள அத்தனை மக்களது வாழ்க்கையையும் மூன்று எண்களே சுட்டுப் படுத்துகின்றன. அவை பிறப்பு எண், விதிஎண், பெயர்எண், என்பனவாகும். ஒருவர்பிறந்த அன்றைய தேதியே பிறப்பெண் அல்லது பிறவி எண் எனப்படும். 2 ஆம் தேதியில் பிறந்த வருடைய பிறப்பெண் 2 ஆகும். 15 ந் திகதியில் பிறந்த வருடைய பிறப்பெண் $(1+5)=6$ ஆகும். இவ்வண்ணம் ஒருவருடைய பிறப்பு எண்ணுக்கு ஏற்ப பலன் உண்டு.

அடுத்ததாக விதி எண் இது ஒருவர் பிறந்த தேதி, மாதம் வருடம் ஆகிய மூன்றையும் கூட்டினால் என்ன எண் வருகிறதோ அதுவே அவரது விதி எண் ஒருவர் 18-5-1954 ல் பிறந்துள்ளார் என்றால், அவருடைய விதி எண், $1+8+5+1+9+5+4=33:3+3=6$ ஆகும். அதாவது தேதி, மாதம், வருடம் மூன்றையும் மேலேயிருப்பது போல் கூட்டி அது இரட்டை எண்களாக அமைந்தால் அதையும் கூட்டி ஒற்றை எண்ணாக அமைத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்துப் பெயர் எண் பெயரை ஆங்கிலத்தில் எழுதி ஒவ்வோர் எழுத்துக்குமுரிய மதிப்பெண்ணைப் போட்டுக் கூட்டி அறிய வேண்டும். முதலெழுத்துக்களுடன் பெயரை எழுதலாம். ஆனால் பட்டங்களைச் சேர்த்துக் கொள்ளுதல் கூடாது. A. RAMAN B.A. என்று இருந்தால் A. RAMAN என்பதைத்தான் கணக்கிலெடுக்க வேண்டும். அதாவது கையொப்பமிட்டு பெயரை மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும். ஏன் ஆங்கில எழுத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்ற கேள்வி எழலாம். ஆங்கிலத்தில் வசதியாக குறைவான 26 எழுத்துக்களேயுள்ளன. உலக அந்தஸ்துடன் புழக்கத்தில் தடினமில்லாமல் எளிதாய் அம்மொழி அமைந்திருக்கிறது. ஆங்கில எழுத்துக்களுக்கான மதிப்பெண்கள் மேலே தரப்பட்டுள்ளன. ஆங்கில எழுத்துக்களில் 9 க்கான மதிப்பெண் கொண்ட எழுத்து எதுவும் இல்லை.

இந்த மூன்று அம்சங்களையும் ஒன்றுடனொன்று இணைத்துக் கணக்கிட்டுப் பலனறிய முயல்வதே சாலச் சிறந்ததாகும் ஒருவருடைய பிறந்த திகதி, மாதம், வருடம் ஆகியவற்றின் கூட்டு எண்ணை ஒற்றை எண்ணாக மாற்றி பலன் அறியலாம். மிகவும் எளிதாகவும், சிக்கல் இல்லாமலும் எந்த நேரத்திலும் பலன் தெரிந்து கொள்ள ஒருவருடைய பெயரிலுள்ள எழுத்துக்களை மதிப்பெண்களாக மாற்றி அந்த எண்களை வைத்துப் பலனறியலாம்.

ஒருவரது பெயரெண்ணும், விதியெண்ணும் மேலுக்கு வளர முடியாமல் தடுத்து நிறுத்தினாலும், தகுந்த பெயர் எண்ணைக் கொண்டு அவர் வாழ்க்கையில் நன்கு முன்னேறலாம். வெற்றியும் அடையலாம் இந்த வாய்ப்பு எண் சோதிடத்தில் மட்டுமே உண்டு. தகுந்த பெயரெண் அமைத்துக் கொண்டால் அனைத்துக் கேடுகளையும் ஊதி அப்புறப்படுத்தி விடலாம். இது ஒரு பெரிய உதவி தானே! எண் சோதிடம் விதியை வென்று காட்டுகிறது.

விதியின் பலன்இறைவனின் பொறுப்பாகும்? ஆனால்,விதியின் கடுமையை நமது மதியால் -பெயர் எண் மாற்றத்தால் குறைத்துக் கொள்ள முடியும். விதியின் கடுமையைத்தனித்துக்கொள்வதற்கு பெயரின்எழுத்துக்களில் மாறுதல் செய்து கொளுதல் ஒருவழி முறையாகும். உங்கள் பிறப்பு எண், விதி எண், பெயர் எண் ஆகிய இம்மூன்று எண்களும் அழகாக பலமுள்ளதாக அமைந்து விட்டால் அதன் பிறகு உங்களுக்கு மகிழ்ச்சியான வாழ்க்கை அமைந்து விடும்.

உங்களுக்கு வேலைவாய்ப்பு எப்படி? திருமணவாழ்வு எப்படி அமையும்? என்பது பற்றிய விபரங்களை யெல்லாம் அறிந்து கொள்ள முடியும். முதலில் உங்களது அதிர்ஷ்டமான தொழில் என்ன? என்பதை பிறப்பு எண், விதிஎண் அடிப்படையில் அறிந்து கொண்டு உங்கள் எண்ணுக்கேற்ற தொழிலைத் தெரிந்து எடுத்துக்கொண்டால், அதில் நீங்கள் வெற்றி பெற்றுச் சுகமாக மேன்மையாக வாழலாம்.

### பிறப்பு எண் -1 விதி எண்-1

உங்களுக்கு மின்சாரம், இரும்பு சம்பந்தமான தொழில் ஏற்றது நெருப்புசம்பந்தமான தொழிலும் சிறந்ததே. நேர்த்தியான ஆபர

(2ஆம் பக்கம் பார்க்க)

### கிரகங்களும் எண் எழுத்துக்களும்

| எண் | கிரகம் | ஆங்கில எழுத்துக்கள் |
|---|---|---|
| 1 — | சூரியன் | A I J Q Y |
| 2 — | சந்திரன் | B K R |
| 3 — | குரு | C G L S |
| 4 — | யூரேனஸ் (ராகு) | D M T |
| 5 — | புதன் | E H N X |
| 6 — | சுக்கிரன் | U V W |
| 7 — | நெப்டியூன் (கேது) | O Z |
| 8 — | சனி | F.P |
| 9 — | செவ்வாய் | எழுத்து இல்லை |

பேராசிரியர் எஸ். சாமி

# யுத்த நிறுத்தத்தை நிராகரிக்கும் அரசு

# புலிகளிடம் மண்டியிட்டதை மறக்கக் கூடாது

## ஆனந்தசங்கரி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பை ஜனாதிபதி தலைமையில் கூடிய அமைச்சரவை நிராகரித்திருப்பது கண்மூடித்தனமான முடிவாகுமென்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவரும் யாழ். மாவட்ட எம்.பியுமான வீ ஆனந்தசங்கரி வலம்புரிக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நாட்டு மக்களினது நலனில் அக்கறை காட்டாத அரசாங்கத்தினது இச் செயல் தமிழ் மக்களைஅழித்தொழிப்பதற்கு ஒப்பான செயலாகும்.

விடுதலைப் புலிகளிடம் இருந்து ஆனையிறவுப்படைத்தளத்தை மீட்டெடுப்பதன் மூலம் இனப் பிரச்சினைக்கு ஒரு போதும் தீர்வு காண முடியாது,

தமிழீழவிடுதலைப்புலிகளின் யுத்தநடவடிக்கைகளினால் வெளிநாடுகளிடம் மண்டியிட்ட இவ் அரசாங்கம் அதனை மறக்காது விடுதலைப்புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பை ஏற்று' சமாதான பேச்சுவார்த்தைகளை உடன் ஆரம்பிக்க வேண்டுமெனவும் அவர் அரசை கோரியுள்ளார்.

(வ)

## பிரசவத்தில் பெண் மரணம்

(வவுனியா)

வீட்டில் குழந்தையை பிரசவித்த பெண்ணொருவர் ஆபத்தான நிலையில் புதுக்குடியிருப்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின் அங்கு மரணமடைந்துள்ளார்.

அலம்பிலைச்சேர்ந்த ஜீவன் சாரியம்மா (வயது-26)என்ற பெண்ணே தனதுமுதல் பிரசவத்தின் போது அதிக இரத்தப் போக்கு காரணமாக மரணமடைந்தவராவார். (ந-5)

### 16 மீனவர்

உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதையடுத்தே நேற்று மாலை 16மீனவர்களும் விடுதலை செய்யப் பட்டனர். [ந]

### நித்திய

துச் செல்லப்பட்டது.

தமிழர்விடுதலைக்கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவரும் யாழ் மாவட்ட எம்.பியுமான வீ.ஆனந்தசங்கரி நீதி அமைச்சர் பட்டிவிரக்கோனுடன் தொடர்பு கொண்டதையடுத்து சடலத்தை திருமலைக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப் பட்டது.

நித்தியதாஸின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 3மணிக்கு திருமலை நிலாவெளியில் 9ம் கட்டையில் நடைபெறவுளளது. (வ)

### புலிகளின்

இருந்து கொண்டு நாம்பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு விரும்பவில்லை.

எமது தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் கடந்த மாவீரர் தின உரையில் குறிப்பிட்டது போன்று, பேச்சு வார்த்தைக்கான இயல்பு நிலை அரசாங்கத்தால் உருவாக்கப்படவும் இல்லை. மேலும் பேச்சு வார்த்தைக்காகவேனும் எமது அமைப்பின் மீதான தடையை அரசாங்கம் நீக்குவதற்கு தயாராகவும் இல்லை.

அதே வேளை வடக்குக் கிழக்கு இணைப்புகாணி-அதிகாரம் ஒற்றையாட்சிக்கு மாறாக சுய நிர்ணய உரிமைகளுடன் கூடிய கூட்டாட்சி அமைப்பு என்பவற்றில் எந்த விதமான விட்டுக்கொடுப்புகளுக்கும் விடுதலைப்புலிகள் தயார் இல்லை என்றும் மேலும் தெரிவித்தார்.

(இ-5)

## பரிசளிப்பு விழா

(கோப்பாய்)

உரும்பிராய் வள்ளுவர் அக்கடமியின் வருடாந்த பரிசளிப்புவிழா இன்றுபிற் பகல் ஒருமணிக்கு அதிபர்கேதீஸ்வரி மயில்வாசனம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில்அகதிகள்புனர்வாழ்வு நிறுவன தலைவர் லயன் அ, நல்லதம்பி பிரதமவிருந்தினராகவும் வடபிராந்திய இந்துப் பேரவைத் தலைவர் சி.வ ஆறுமுகசாமி சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (இ)

## பிரதோச பூசை

வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வரன் ஆலயத்தில் இன்று பி.பகல் 2·30 மணிக்கு பிரதோச ஆராதனைகள் நடைபெறும், இ-103

### மக்களை...

மர்த்தபடவுள்ளனர். இவர்களில் ஜே/92 கிராம சேவகர் பிரிவில் குடியமர விரும்புபவர்கள் அரியாலை கண்டி வீதியிலுள்ள சிவில் இணைப்பு அலுவலகத்திற்கும், ஜே/94ல் குடியமர விரும்புவோர் ஸ்ரான்லிக் கல்லூரி சந்தியிலுள்ள சிவில் இணைப்பு அலுவலகத்திற்கும் இன்று காலை சமுகம் கொடுக்குமாறு அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாளை திங்கட் கிழமை ஜே/93, ஜே/95 ஆகிய கிராம சேவகர் பிரிவு மக்கள் தமது இடங்களில் மீளக் குடியமர அனுமதிக்கப் படுவர் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

மீளக் குடியமரவுள்ள இடங்களை தெரிவு செய்யும் பணியில் 512வது பிரிகேட் உயரதிகாரிகள் ஈ பி டி.பி வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளர் ந. திரிலோகநாதன், அரியாலை இடம் பெயர்ந்தோர் நலன்புரிச்சங்க உறுப்பினர்கள் வி.ரி செல்வராசா, வைட்ரெஸ்ஆகியோர் ஈடுபட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது: (இ)

### மீளக்...

போர் என்ற கோசத்துடன் எமது மண்ணை ஆக்கிரமித்துக் கொண்டு அரசு இன அழிப்புப்போரை மேற்கொண்டு செல்கிறது.

தான் ஆக்கிரமித்த மண்ணில் தமது நிலைப்பாட்டை உறுதிப்படுத்திக் கொள்ளவும் தமது பாதுகாப்பினை உறுதிப்படுத்திக்கொள்ளவும், மக்களை இராணுவம் கேடயமாகப் பயன்படுத்தி பெரும் மனித அவலத்தை ஏற்படுத்தி வருகிறது.

தற்போது நாம் தந்திரோபாயமாக பின் நகர்வுகளை மேற்கொண்ட கைதடி, நாவற்குழி, மட்டுவில், சாவகச்சேரி பகுதிகளில் மக்களை குடியமர்த்தி தமது பாதுகாப்பைப் பலப்படுத்தும் கேவலமானதும், கோழைத் தனமானதுமான நிகழ்வுகளில் இராணுவம் இறங்கியுள்ளது.

#### தந்திரோபாயமான பின்நகர்வு

தந்திரோபாயமான முறையில். நாம் பின்நகர்ந்துள்ள பகுதிகளிலுள்ளவதிவிடங்கள் வயல்நிலங்கள் ஆகியவற்றில் இராணுவம் பொறிவெடிகள் மிதிவெடிகள். வாகனக் கண்ணிகள் ஆகியவற்றைபுதைத்து வைத்துள்ளது, நாமும் இப் பகுதிகளில் வெடிகளை புதைத்து வைத்துள்ளோம்.

இவைகள் எல்லாம் ஓசைகள் எதுவுமின்றி உயிர்களை பலிகொள்ளக் கூடியவை உடல் அங்கங்களை நிரந்தரமாகவே பறிக்கவல்லது.விமானத் தாக்குதல்களினால் தென்மராட்சி, மக்கள் வாழ முடியாத சூனியப் பிரதேச மாக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அப்பகுதிகளில் போர்ச்சூழல்சிறிதளவும் நீங்கவில்லை அமைதியான புறநிலையையும் நல்லெண்ண சூழ்நிலையையும் ஏற்படுத்தும் நோக்குடன் நாம் மேற்கொண்ட போர் நிறுத்த அறிவிப்பை உதாசீனம் செய்து விட்டு எம்மை அடக்கியாள ஆவல் கொண்டு அரசு போரைத் தொடர்கிறது.

எனவே தென்மராட்சிப் பகுதி ஆபத்து சூழ்ந்த பகுதியாக இருப்பதனால் தான் தென்மராட்சியில் மக்கள் குடியேற வேண்டாமென மக்களை கேட்டுக் கொள்கின்றோம் என்றும் அறிவிக் கப்பட்டுள்ளது. (ம)

## சுகாதாரமற்ற சமையல் கூடங்கள் அதிருப்தி நிலையில் நோயாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலையின் இரு சமையற் கூடங்களும் முற்றிலும் சுகாதாரமற்ற வகையில் காணப் படுவதாக சம்பந்தப்பட்ட இடத்தில் தயாரிக்கும் உணவுகளை அருந்துபோர் மட்டத்தில் அதிருப்தி தெரிவிக்கப் பட்டுள்ளது.

வைத்தியசாலையின் சிற்றூழியர்களுக்கும், அங்கு தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளருக்கும் ஏற்ற உணவுகள் தயாரிக்கப்படும் இடங்களுக்குமிக அருகாமையில் பிரேத அறை காணப்படுவதுடன்,சமையலறையின் பின் பகுதியில்பற்றைகள் வளர்ந்து காணப்படுகின்றன.

இதன்காரணமாகபல்வேறு தொற்றுநோய் அபாயங்களும் சுகாதாரச் சீர் கேடுகளும்ஏற்படும்நிலையில்அங்கு ஆக்கப்படும் உணவுகளை உண்போர் மத்தியில் எதிர் நோக்கப்படுகிறது.

இதே சமயம், இவ்வாறு வைத்தியசாலையிலேயேசுகாதாரப் பின்னடைவான நிலைமைகள் காணப்படுமானால் மற்றையோரைத் திருத்துவது எங்ஙனம்? என பொதுமக்களால் வினாவெழுப்பப்பட்டுள்ளது. (உ-12)

### சிங்கப்பூரிலிருந்து பூ மாலை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் ஈழத்துச்சிதம்பரத்திற்கு நேற்று சிங்கப்பூரிலிருந்து பூமாலைகொண்டு வரப்பட்டு பூசை இடம்பெற்றதாக தெரியவருகிறது.

இதேவேளை இந்திய தவில் நாதஸ்வர வித்துவான்களின் தவில் நாதஸ்வரக்கச்சேரியும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## திருவூஞ்சல்

(நல்லூர்)

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் நாளை மாலை 5 மணிக்கு திருவெம்பாவையொட்டிய திருவூஞ்சல் நிகழ்வு இடம் பெறும். (இ-103)

### லங்கா---

மாறும் கேட்கப்பட்டுள்ளது:

இதேவேளை பருத்தித்துறை 524வது படைத்தளத்தைச்சேர்ந்தோருக்கு ரான் அலுவலகத்தில் பயணப்பதிவுகள் மேற்கொள்ளப்படுவதுடன் பயணச் சீட்டுக்களும் வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## ஜே.வி.பி நாளை ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

வாழ்க்கைச் செலவின் உயர்வைக்கண்டித்து ஜே வி. பி, யினர் நாளை கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாகஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளனர்.

இதில் சுமார் ஐம்பதாயிரம் பேர் கலந்து கொள்வார்களென 'எதிர்பார்க்கப்படுகிறது (ந)

## தொடர் கருத்தரங்கு

யாழ். மாவட்டத்தில் தற்போது அதிகரித்து வரும் வீதி விபத்துக்களை அடுத்து, மக்கள் நலன்புரிச் சங்கத்தினர் வீதி ஒழுங்குகள் குறித்த கருத்தரங்குகளை கல்வித்திணைக்களங்களின் அனுசரணையுடன் பாடசாலை ரீதியாக நடத்திவருகின்றனர்.

இதேவேளை பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி மாணவர்கள் வாசித்து விளங்கக்கூடிய வகையில் வீதி ஒழுங்கு சம்பந்தமான கை நூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் வீதி ஒழுங்கு சம்மந்தமான விழிப்புவாரம் ஒன்றினை விரைவில் அனுஷ்டிக்க உள்ளதாக மேற்படி சங்கம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட் பட்டுள்ளது. (உ-3)


## கண்ணீர் அஞ்சலி

நெடுந்தீவு பிரதேச சபையின் உபதலைவர்

ஜெயகாந்தன் அவர்களின்

அன்புத் தந்தை

### மருதையினார்

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

தலைவர், உறுப்பினர்கள்
உத்தியோகத்தர்கள்
ஊழியர்கள்
திருநெல்வேலி. நல்லூர் பிரதேச சபை

(கி-936)

## ஸ்ரீசெல்வா

(யாழ்ப்பாணம்)

முரளி **மனுநீதி**

காலை 10-30

பி. ப. 2-15

சிவாஜி பத்மினி நடித்த

**தூக்கு தூக்கி**

தவிர்க்க முடியாத காரணத்தால் இன்று காண்பிக்கப்பட இருந்த பதி பக்தி படம் காண்பிக் கப்படமாட்டாது.

(கி-688)

76வது அகவையினை அறக்கொடை விழாவாக கொண்டாடும்

அன்னைத் தமிழையும், அரும் சைவத்தையும் போற்றி வளர்த்து வரும்

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி

**தங்கம்மா அப்பாக்குட்டி**

அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்

**தெல்லிப்பழை**

**ப. நோ. கூ. சங்கம்**

துர்க்காபுரம், தெல்லிப்பழை.

(கி-935)


இப் பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தினரால் இல . 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.